OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 OCT 1942
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	சித்திரபாநு ௵ ஆவணி - புரட்டாசி ௴	ஸஞ்சிகை 9

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா பவேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத் ... க்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் ...

... க்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ... கை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்ய

JL
இ22ண211, 1141
M42.1.9
2/10/06.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பாசுரங்களின் பகுதி

[வித்வாங் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.]

[ஸஞ்சிகை 6 : பக்கம் - 204 தொடர்ச்சி]

6. துண்ட வெண்பிறை யன்துயர் தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டு வாழ்பொழில் சூழ்அரங் கநகர் மேயஅப்பன்
அண்ட ரண்ட பகிரண் டத்தொரு மாநிலமெழு மால்வரைமுற்று
முண்ட கண்டம்கண் டீர்அடி யேனைஉய் யக்கொண்டதே.

துண்டவெண்பிறையன் துயர் தீர்த்தவன்—(1) இங்கே கண்டத்தின் அநுபவம். நீலகண்டருடைய கண்டம் உயர்ந்ததென்பர். ஜநங்களை நாஶம் செய்யவந்த காலகோடி விஷத்தைப் பாநம் செய்து உலகத்தைக் காப்பாற்றித் தம் கண்டத்திற்குள் விஷத்தையடக்கியதால் பொன் வர்ணமாயிருந்த கண்டம் நீலமாய்க் கறுத்ததென்பர். அவர் பெருமைக்கும் மேற்பட்ட பெருமையைக் காட்டுகிறார். அவருக்கு ஏற்பட்ட குரு பாதகத்தைத் தீர்த்தவரென்கிறார். பாதகம் கொடியவிஷம். (2) காலகோடி விஷத்தையுண்டதால் நீலகண்டர் கண்டம் பெருமை பெற்றது. அவர் கண்டத்தையும், அவரையும், உலகத்திலுள்ள ஸகல விஷங்களையும் அண்ட பஹிரண்டத்து ஒருமாநில மெழுமால்வரையும் முற்று முண்ட கண்டம் எத்தனை பெருமையுடைய தென்று நீரே காண்பீரென்கிறார். (3) விஷத்தால் கண்டம் நீலமாயிற்று. இவர் திருமேனி முழுவதும் ஸ்வபாவமாகவே நீலம். 'முடிவில்லதோ ரெழில் நீலமேனி ஐயோ' என்று மேலே பாடுகிறார். (4) என்பழவினையறுப்பவர் மட்டுமல்ல. நீல கண்டருக்கும் வினைத்துயர் தீர்த்தவரென்கிறார். (5) அயனைப் படைத்ததோரெழில் என்று உந்தியை வர்ணித்து அயனிலும் பெரியார் என்கிறார். இங்கு துண்ட வெண்பிறையாரிலும் பெரியாரென்கிறார். (6) சந்த்ரன் பகவானுடைய மனத்திலுதித்தவர். பிறையைச் சூடுவதால், பகவானுடைய மனத்தில் உதிக்கும் திருவுள்ளத்தைத் தலையால் தாங்குகிறார் என்றும் த்வநிக்கிறது. தலையில் வெண் சந்த்ரன், அக்நி வர்ணமான செஞ்சடை, கங்கை நீர்ச்சுழல், கண்டம் நீலம், பொன்னார் திருமேனி என்றிப்படிப் பலவர்ணங்கள். பெருமாள் திருமேனிமுழுதும் கருமேகவண்ணம், அதிலும் கேஶம் மைவண்ணம். (7) 'பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே, கபாலநன் மோக்கத்துக்கண்டு கொண்மின்' என்று திருவாய் மொழியில் பரத்வ நிர்ணய ப்ரகரணத்தில் அநுபவம்.

அஞ்சிறையவண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர்மேய அப்பன்—(1) அவன் கருமைபோல் அவனைப் பாடும் வண்டுகளும் கரிய; அப்பெருமாள் பாடகரும் பெருமாள் போன்ற வண்ணத்தவர். (2) அரங்க... பாடும் வண்டுகள் வாழ்வண்டுகள்; வாழாட்பட்டு நின்றவை:

(3) மதுகரர் ஸந்யாஸிகள்; திருவடித்தாமரைத் தேனைப் பருகி இன்புறும் ஞாந கர்மங்களாகிய இரண்டு சிறகுகளை உடையவர். 'ஸாரஂ மாநாஂ வஷாஂஙுஜஷ' என்று திருவடித்தாமரைத் தேனையருந்தி இன்புறுவர் சுகப்ரஹ்மரிஷி. 'ஸாரங்கம்' என்று வண்டுக்குப் பெயர்; ஸார ப்ரஹ்மத்தைப் பாடும் பக்தருக்கும் பெயரென்பர். ஸ்ரீதரர்,' ஸாரஂ மாயஜீதி ஸாரஂமாஃ.'

அண்டரண்ட பகிரண்டத்து ஒரு மாநிலம் எழுமால்வரை முற்று முண்ட கண்டம்—எழுமால்வரையில் கிரீசர் வஸிக்கும் வெள்ளிமலையும் அடங்கியது. நீலகண்டருடைய கண்டத்திலும் மஹத்தான கண்டம்.

கண்டீர்—நீங்களே பாருங்கள்.

அடியேனை உய்யக்கொண்டதே—'அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்' என்றபடி என்னை அவருண்டு அவருக்கு நான் போக்யனாகிறேன். அண்டரண்ட பஹிரண்டங்களை உண்டதிலும் திருப்தியடையாமல், மலைகளை (குல பர்வதங்களை) யுண்டும் த்ருப்தி யடையாமல், அணுவாகிய என்னை ஆசையுடன் உண்கிறான்; நீங்களே பாருங்கள். உண்ணப்படும் வஸ்து ஜீர்ணமாகிவிடும் என்பர். உண்ணப்படும் நான் இதனாலேயே உஜ்ஜீவித்து இன்புறுகிறேனென்னும் விந்தையையும் பாருங்கள். இந்த அற்புதக் காட்சியை நீங்களே கண்கூடாகக் காணுங்கள்.

ப்ரஹ்மஹத்யா என்பது பெரும்பாதகம். ப்ராஹ்மண ஜாதி ஸாமாந்யரின் ஹத்தியையே பாதகமென்பர். ப்ரஹ்மாவின் தலையையே கிள்ளியெறிந்தது பெரும் பாதகம். கிள்ளின கையிலேயே அந்தப் பாதகம் ஒட்டிக்கொண்டது. எந்த அவயவம் பாபம்செய்ததோ அங்கே அது கெட்டியாய் ஒட்டிக்கொண்டுவிட்டது. இதனால், ஈஶ்வரனாயினும் ஒரு பாபம் செய்தால் அது கழற்ற முடியாமல் அவரிடம் ஒட்டிக்கொண்டு அவரையே பாதிக்கும் என்று ருஜுவாகிறது. ஈஶ்வரன் வலிமையினும் பாபத்தின் வலிமை அதிகம். இந்த உண்மை ஸர்வலோக ஸாக்ஷிகமாக இந்தச் சரித்ரத்தால் விளக்கப்பட்டது. தலையில் பிறை சூடியென்ன? கையில் கபாலம் விடாமல் ஒட்டிக்கொண்டுவிட்டதே! உலகத்திற்கெல்லாம் க்ஷேமம் சந்த்ரனாயினும், ஈஶ்வரனென்று ஐஶ்வர்யம் பெற்றவராயினும், பாபம் செய்தால் அது விடாமல் ஒட்டிக்கொள்ளும். ஸர்வேஶ்வரன் க்ருபையால்தான் அது கழியுமென்று இந்த வ்ருத்தாந்தம் உலகமறியக் காட்டுவது. 'மாநுஷ ஜந்மம் பெற்றும், ஊமையும் செவிடு மில்லாமலிருந்தும், நா வாயிலிருந்தும், நமோ நாரணவென் றோவாதுரைக்கும் உரையிருந்தும், பகவந்நாமத்தைச் செவியுறக் காதிருந்தும், எவன் ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கு ஸுலபமான வழிகளைத் தேடுகிறதில்லையோ அவன் ப்ரஹ்மஹா, ப்ரஹ்மஹத்யக்காரன் என்று மாத்ஸ்ய புராணம் கூறுகிறது. ப்ரஹ்ம மானசப்பட்டு ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கென்று கொடுத்த மநுஷ்ய ஜந்மத்தை வீணாக்குகிறவன் ப்ரஹ்மத்தை ஹநாஶமாக்கிக் கொலை செய்பவன்போலாகிறான். எல்லாவித ப்ரஹ்மாக்களையும் அபஹதபாப்மா[illegible] ப்ரஹ்மம். மாத்ஸ்ய வசநத்தை ந[illegible]

உதாஹரித்தார். 'தத்ர நாராயண: ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:' முன் பாட்டில் திருவார மார்பை ஸேவித்ததும், ஸ்ரீமானான நாராயணனுடைய ஸர்வேஶ்வரத்வத்தையும், எல்லையற்ற கருணையையும் இங்கே பாடுகிறார். கபாலம் ஆயிரம் துண்டமாய் உடைந்தது. வெண்பிறைச் சந்த்ரனுக்கும் ராஜயக்ஷ்மாவான பாபரோகம் போக்கப்பட்டதையும் பிள்ளை உரைத்தார். 'உண்ட கண்டம்'— க்ஷுத்ராவராவர ப்ரஹ்மாஸ என்று ஸூத்ரத்தை நாயனார் உதாஹரித்தார். கண்டம் யாவற்றையும் உண்டு வயிற்றில் சேர்த்தது. 'ஆதி' என்பதும் கண்டத்தி லொட்டுமென்று ரஸம். 'ஆதி' 'அத்தா'.

7. கையி னார்சுரி சங்கன லாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துள பவிரை யார்கமழ் நீண்முடியெம்
மையனார் அணி யரங்க னார்அர வின்னணை மிசை மேய மாயனார்
செய்ய வாயையோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே.

கையினார் சுரிசங்கு அனல் ஆழியர்—(1) சக்கரத்தைக் காலஸ்வரூபமென்பர். ஶப்த குணமான ஆகாஶ ஸ்வரூபமாகும் ஶங்கு. காலம் தேஶமெல்லாம் கைக்குள்ளடக்கித் தன் ஸ்வாதீநமாக ஆளும் ஈஶ்வர தத்வம். ஸ்ரீ ஶங்கரர் சக்ரத்தைக் காலசக்ர ஸ்வரூபமென்று அநுபவித்தார். (2) சக்ரத்தை மோக்ஷ ஸங்கல்பமென்னும் தத்வமென்று ஸ்ரீ பாஞ்சராத்ரங்கள் கூறுகின்றன. கண்டத்தால் 'அயு' நமாமோக்ஷயாமி என்று பேசின ஸங்கல்பத்தை ஸூசிக்கிறார். பாணன் மோக்ஷாவஸரம். (3) சந்த்ர ஸூர்யர்கள்போலக் கைகளில் மின்னுவன. (4) விஷ்ணுவின் அஸாதாரண சிந்நங்கள். வைஷ்ணவர்கள் எல்லோரும் இப்படிக் கைகளில் தாங்கவேண்டியது. (5) 'செய்ய வாயை' அநுபவிக்குமிடம் 'வம்ஶேந ஶம்வவதிநா வ நிஷேவிதம் தேவிம்வாயாஙு' என்பர். பாஞ்சஜந்யம் 'செய்ய வாயை', திருப்பவளத்தை அநுபவிக்கும் பாக்யம் பெற்றது. 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று மோக்ஷஸங்கல்பமாகிய ஸூதர்ஶநரை வெளியிடுவதும் செய்ய வாயே. வாயின் வர்ணநத்திலும் ஶங்கு சக்ரங்களை முதலில் குறிப்பது மிகப் பொருத்தமுடைய்து.

நீள்வரைபோல் மெய்யனார்—பச்சைமாமலைபோன்ற திருமேனி. இதைச் சிலர் மாயிகம்—வெறும் தோற்றம் என்பர். பர்வதம் போன்ற மெய் மெய்யேயென்று கருத்து.

துளப விரையார் கமழ் நீண்முடி—'கிரீடஹாரகேயூரவலயைர் வநமாலயா ஸுஶோபிதம்'; 'வஹதே வாஸநாம் துளஸீவநே'; 'நிவந்த நீண் முடியன்' என்ற த்ரிவிக்ரமாநுபவம் திரும்புகிறது.

எம் ஐயனார்—நீர் வளர்ந்த குலத்தில் ஐயனாரென்னும் தெய்வத்தை வணங்குவரே; உமக்கு அவர் தெய்வமல்லவோ என்றால், அல்ல, அல்ல. எம் ஐயனார் இவரே. அரங்கனிலும் மற்றுமோர் தெய்வமுண்டோ, மற்றுமோர் ஐயனார் தாம் உண்டோ! 'கா[illegible]னன் திருவரங்[illegible]ன்றோ எம் இறைவர் என்றபடி

அணி யரங்கனர் அரவின்ணைமிசை மேய மாயனர்—(1) துளவி யின் மணம், பூம்பொழில் மணம், அரவின் மணம், வேத மணம், தமிழ் வேதத்தின் மகிழ் மணம், ஸ்வதஸ்ஸித்தமான ஸர்வ கந்தம். இப்படிப் பரிமள ரங்கன் அநுபவம். (2) மாயன் என்பது ஆஸ்சர்ய ஶக்திகளைச் சொல்லுகிறது. திருமேனியை 'மாயை' என்று சொல்லும் வசநமு முள்ளதே; ஆனல் 'மாயை' என்பதற்கு ஆஸ்சர்ய ஶக்திகளை யுடையது என்று பொருள் என்று 'மாயனர்' என்பதால் ஸூசிக்கிறர். மாயனு ரும் மெய்யனரே, பொய்யனரல்ல.

செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே—ஶுசிஸ்மிதாய தாம்ரவிம்போஷ்ட்ய' என்பர் அதரத்தை. 'வாரவிம்பாயதோஷ்டம் வக்த்ரம்' என்று ஸோபாநம். செய்யவாய் என் ஸ்வாந்தத்தில், சிந்தையில், காடமாய் ஒட்டிக்கொள்ளுகிறது என்று அங்கு அநுபவம். 'செய்யவாய் என்னைச் சிந்தை கவர்ந்ததுவே' என்பதை ஸோபாநம் அடி யொற்றியதாகும். 'என் சிந்தை அதைக்கவர்ந்தது' என்று பேசும்படி முதலில் கவரும் பெருமை என்சிந்தைக்கு இல்லை. அவனே 'ஆதி'. முதற் செயல் அவனதேல், உம்மை மோக்ஷணம் செய்கிறேனென்ற சப்தம் உந்தி யில் உதித்துக் கண்டத்திற்கு வந்து அங்கிருந்து வ்யக்தத்வநி ரூபமாய் செய்யவாய் வழியாக வெளிவந்து காதில் விழவேணும். சங்கு ஓங்காரவடி வம்; ஓங்கார த்வநியுமுள்ளது. 'ஓம்' என்பது 'ஆம்' என்னும் அங்கீகாரத் தைக் காட்டும். பாஞ்சஜந்யம் ப்ரணவ மஹிமையுடையது. ப்ரணவ விமாநத்துள் இருப்பதோடு, கையிலும் ப்ரணவ மஹிமையுடைய சங்கைத் தரிக்கிறர். அஸ்த்ர பூஷணங்களில் ஒன்றுகிய ஸ்ரீவத்ஸத்தின் அம்ஶரான ஆழ்வாருக்கு ஶங்கு சக்ரத்தாழ்வார்கள் ஸஜாதீயர். சக்ரத்தாழ்வார் நம்மை மோக்ஷணம் செய்யும் ஶங்கல்ப தத்வம். மநஸ்ஸுகளுக் கெல்லாம் சயிமாநியான ஆழ்வார் ஸுதர்சநாழ்வார். கைகளிலும் திருவடிகளிலும் ரேகைகளாய் ஒட்டியிருக்கும் ஆழ்வார்கள் திருத் தோள்களில் பெருமாளின் கையால் தரிக்கப்படுகிறர்கள். திவ்யாயு தாழ்வார்கள் பெருமாள் திருக்கைகளில் ரேகையில் ஒதுங்கிக் கிடந்து பெருமாள் திருமேனியிலே தோன்றி நிற்கிறர்கள் என்று போகம். பாஞ்சஜந்யம் மந்த்ரமயம்; வேத சப்தமயம். மந்த்ரமும், மனமும் ஒன்றுபட உபகரிப்பவர் இவ்வாழ்வார்கள். ஏழு முதல் நான்கு பாட்டுக்களும் கைங்கர்யாநுபவம் ப்ரார்த்தநைக்கு ப்ரஸ்தாவநை யாகுமென்றும் போகம். 'பெரிய பெருமாள் த்விபுஜராயும், நம்பெருமாள் சதுர்ப்புஜராயும் ஸேவை ஸாதிக்கிறர்கள்; ஸ்ரீ வைகுண்டப் பெருமா னும் இருவிதமாயும் ஸேவை ஸாதிக்கலாம்' என்று பிள்ளையும் நாயனரும்.

'எம் ஐயனர்'—'என்னைப் பெற்ற தகப்பனர்' எனது நாயனர். 'பிதாஹமஸ்ய ஜகத:' என்று கீதை. நீசனயினும் எனக்கும் தகப்ப னென்பதல்லவோ தத்வம். அதை நான் இல்லை என்றல் விபரீத ஞான தோஷம் வருமே. உலகுக்கோர் தனியப்பன் என்னப்பன் அல் லனே? அப்பனை எப்படி மறப்பது? எப்படி மறைப்பது?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

சரணாகதி

(ஸ்ரீ. உப. வி. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீ கோமள விலாஸ்,
அம்பாள்புரம், புதுக்கோட்டை.)

க்ருபாஹித: ஸ்ரீமாந் ஸிம்ஹோபி நரகேஸரீ |
ப்ரபத்திஸாத்யமோக்ஷோ யோ ராஜதே தத்ப்ரகாஸகே ||

ஶரணாகதி என்பது ஒருவனுக்கு ரக்ஷகனும் ஈஶ்வரனுமான ஒருவனைக் குறித்துத் தனக்கு இஷ்டபலத்தைக் கோரி, அதற்குவேண்டி, ஶாஸ்த்ர உபாயத்தைத்தான் செய்யச் சக்தியற்றவனா யிருப்பதையுற்று, தன் ஆகிஞ்சந்யத்தைக் காரணமாகக் கொண்டு, தான் அநுஷ்டிக்க வேண்டிய ஶாஸ்த்ர உபாயத்துக்குப் பதிலாகத் தான் மனம் தாழ்ந்து செய்யும் ப்ரார்த்தனையை வ்யாஜமாகக் கொண்டு தனக்குக் கோலின பலம் கொடுத்து ரக்ஷிக்கும்படி ப்ரார்த்தித்தல். இந்த சரணாகதி அல்லது ப்ரபத்தி என்பது நம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்கே அஸாதாரணமானது.

இதன் தத்வத்தை அறியுமுன்னர் 'நமக்கு ரக்ஷகனும் ஈஶ்வரனுமான பகவானுடைய ஸ்வரூப மென்ன? நம் ஸ்வரூப மென்ன? நமக்கும் பகவானுக்கும் உள்ள ஸம்பந்தம் எப்படிப்பட்டது? நாம் கோரும் பலம் என்ன? அது எத்தன்மை வாய்ந்தது? என்பதை முதலில் அறியவேணும். அப்படித் தெரிந்தால் தான் அந்தப் பலத்தை அநுபவிப்பதில் ஒரு ஆஸ்தை ஏற்பட்டு அதில் ப்ரவர்த்திக்கத் தோன்றும். "ப்ரயோஜநமநுத்திஶ்ய ந மந்தோऽபி ப்ரவர்த்ததே |" (ப்ரயோஜநத்தை எதிர்பாராமல் முட்டாள் கூட ஒரு கார்யத்திலும் ப்ரவர்த்திக்கமாட்டான்).

த்வைதாத்வைத விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தங்களில் ப்ருஹ்ம ஸ்வரூப விசாரத்தில் அநேக வித்யாஸங்களிருந்தாலும், ஸர்வஜகத்துக்கும் காரணமானவன் பகவான்தான் என்பதில் அபிப்பிராய பேதமில்லை.

ப்ருஹ்ம ஸ்வரூபம்: அதில் நம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ரீதியாக ப்ருஹ்மம் ஞான ஸ்வரூபமானதும், 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்கிற ஸ்வரூப நிரூபண தர்மங்களோடு கூடியதும், விபுவாயும், சித் அசித் இரண்டையும் ஶரீரமாக உடையதாயும், ஜகத்துக்கே ஆதாரமாக இருப்பதும் அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந மாயுமிருப்பது.

மேலே சொன்ன ப்ரகாரம் ப்ருஹ்மத்தின் ஸ்வரூபம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அவருக்கு ஏற்பட்ட கல்யாண குணங்கள் அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:—பாப ஸம்பந்த மில்லாதவர், கிழத்தன மில்லாதவர், மரண மில்லாதவர், சோக மில்லாதவர், பசியில்லாதவர், (ஜரை) தாக மில்லாதவர், நினைத்ததைச் செய்ய வல்லவர் முதலிய அநேக விதமானவை. சுருக்கமாகச் சொல்லில் ஈஶ்வர லக்ஷணம் 'விபுத்வே ஸதி சேதநத்வமும் ஸ்வாநந்யாதீந நிருபாதிக ஶேஷித்வமு'கள் என்றும் நிர்ணயிப்பார்கள். இவன் சித்துக்கும் அசித்திக்கும் ஶரீரி என்கிறதால் ஸகல ஜகத்துக்கும் அந்தர்யாமியாக இருந்து உலகத்தை வ்யாபரிக்கிறான். இப்படிப்பட்ட ப்ருஹ்மம் 'இதம் ப்ரஹ்ம தமோऽதி ததீர்யதரம் ருசிரம் யதாத்ரூபதோ' என்கிறபடி அத்யத்புதமான திவ்ய மங்கள விக்ரஹத்தோடு கூடிய ஸ்ரீமந் நாராயணன்தான் என்று,

நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: ।
விஶ்வம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் ப்ரபும் ।
ஏஷ ஸர்வபூதாந்தராத்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: ।
அஹம் ஸர்வஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா ॥

முதலிய ஶ்ருதிகளாலும் கீதையாலும் தெரியவருகிறது.

OFFICE OF THE REGISTRAR 7 OCT 194

ஜீவ ஸ்வரூபமாவது: ஜ்ஞாநத்வம், ஆநந்தத்வம், அமலத்வம், அணுத்வம், சேஷத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களை யிட்டு நிரூபிப்பார்கள். இந்த ஜீவன் ஸர்வேஶ்வரனுக்கே நிருபாதிக ஶேஷனென்றும் சொல்வார்கள். இப்படிப்பட்ட ஜீவனுக்கு லக்ஷணம் அணுத்வே ஸதி சேதநத்வம். இப்படிப்பட்ட ஜீவசேதநர்கள் பத்த நித்ய முக்தரென்று மூன்றுவகைப்பட்டவர்கள். இவர்களில் நித்யரென்பவர், ஒரு காலத்திலும் கர்ம ஸம்பந்தத்தினால் ஸம்ஸார சக்ரத்தில் அகப்படாமல் ஶங்கசக்ரகதாதரர்களாய், பகவானுக்கு ஸமமான திவ்ய ஶரீரத்தோடுகூட ஸ்ரீ வைகுண்டத்தில் எப்பொழுதும் பகவானுக்கே கைங்கர்யம் செய்வதே ஸ்வரூபமாக உடைய அநந்த கருட விஷ்வக்

ஸோதிகள். முக்தரென்பவர், ஒரு ஸமயம் கர்மாவின் பயனுக உலகில் உழன்று, கர்மா நீங்கின பிறகு பகவானுக்கு ஸமமான ஶரீரத்தோடு ஶங்கசக்ரகதாதரர்களாய் எப்போதும் பகவானுக்கே கைங்கர்யம் செய்து கொண்டிருப்பவர்கள்.

கர்மா ஒருதரம் நீங்கி இவர்கள் இப்படி மோக்ஷத்துக்கு வந்துவிட்டால் மறுபடி திரும்ப கர்மாவின் பயனுக உலகில் உழலும்படி நேராது.

மேல்சொன்ன நித்யரென்ன, முக்தரென்ன இவர்களுக்கும் பகவானுக்கும் என்ன வித்யாஸமெனில், இவர்களுக்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய ஜகத் வ்யாபாரமும், லக்ஷ்மீபதித்வமும் கிடையாது. அவை இரண்டும் பகவானுடையதே. மற்றப்படி எல்லாவிதத்திலும் பகவானுக்கு ஸாம்யமான அநுபவத்தை யுடையவர்கள். இது ப்ருஹ்ம ஸூத்ரத்தில் 'ஜமத்வ்யாபாரவஜ்ஜம்' 'ஹோமாத்ரஸாம்யலிங்காச்ச' என்கிற ஸூத்ரங்களாலும் 'ஸோஶ்நுதே ஸர்வான் காமான்' என்கிற ஶ்ருதியாலும் சொல்லப்பட்டது. பத்தரென்பவர் அவித்யா கர்மவாஸநா ருசிப்ரக்ருதி ஸம்பந்தயுக்தரா யிருக்குமவர். இப்படிப்பட்ட பத்த சேதநர் சதுர்முக ப்ரஹ்மா முதல் சிறுபுழுவரை எல்லோருமே.

'ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மநுஷ்யா: பஶவஸ்ததா: ।
ஸ்தாவராந்தாஶ்ச ஜீவாஸ்தே ஸம்ஸாரவஶவர்த்திந: ॥'

இங்கு சரணுகதி அல்லது ப்ரபத்தி என்பது தத்ஸமயம் பத்தர்களாகிய நமக்கு ஏற்பட்ட உபாயமானதால் நாம் அதை அநுஷ்டிக்கு முன்னல் 'அதனல் ஏற்படும் பலன் என்ன? அது எத்தன்மை வாய்ந்தது?' என்று அறியவேணும். லோக ரீதியாக அநேகம் பேர்கள் அநேகவிதமான பலனைக் கொடுக்கக்கூடியவர்களாக இருந்தும், நாம் கோரும் பலத்தைக் கொடுக்கச் சக்தியுள்ள அதிகாரியையே நாம் நெருங்குவது ஸஹஜம். அதுபோல, அநேக க்ஷுத்ர தேவதைகள் பலவித க்ஷுத்ர பலனைக் கொடுக்க வல்லவராணுலும், மோக்ஷம் என்னும் உத்க்ருஷ்டமான பலனைக் கொடுக்க கூடியவன் ஸ்ரீமந் நாராயணனே. மற்றவர்கள் யாவருமில்லை. இப்படிப்பட்டவர், சரணுகதி செய்தவர்களுக்குப் பலமாகக் கொடுக்கும் மோக்ஷம் என்பது என்னவென்ருல் :—
நம் ஶாஸ்திரங்களில் அநேகவிதமான கர்மாக்களை விதித்து அவற்றிற்குத் தக்கபடி ஸ்வர்க்காதி க்ஷுத்ர பலமும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வர்க்கம் என்பது யஜ்ஞ தாநாதி ஸம்ஹிதை உக்தாதிகளின்படி அவரவர் புண்ய கர்மாவுக்குத் தக்கபடி சிலகாலம் ப்ருஹ்ம லோகம் உட்பட கர்மாவுக்கு அநுகுணமாக எல்லா உலகங்களிலும் துக்காநுபவமில்லாமல் ஸுகம் அநுபவித்து, பிறகு மற்ருெரு கர்மாவை அநுபவிக்கத்

திரும்பி விடுவது. ஆகையால்தான் ஶாஸ்த்ரங்களில் புண்யம் பாபம் இரண்டும் துல்யமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஸ்வர்க்கத்தைவிட வேறானது ஸ்ரீ வைகுண்டம். இது ஹூர்ஹுவஸ்ஸுவர்மஹர்ஜநதபஸ்ஸத்யலோகங்களாகிய ஸப்த லோகங்களடங்கிய ப்ரக்ருதி மண்டலத்துக்குமேல் ஶுத்தஸத்வத்தால் அமையப்பெற்ற ஒரு உன்னதமான ப்ரதேசம். மேலே சொன்ன ஏழு உலகங்களும் அதல விதல முதலான ஏழு பாதாள உலகங்களும் ஆக 14 உலகங்களும் ப்ரக்ருதி மண்டலம் என்கிற ஒரு வட்டமான கோட்டைக்குள் அடங்கினவை. இவை 'ஸத்வ ரஜஸ்தமோ' மயங்களானவை. இதற்கு மேல் ஶுத்தஸத்வத்தால் அமைந்த ஜோதிர்மயமான உலகம் ஸ்ரீ வைகுண்டம் என்பது. இங்கு இருக்கும் மண்டப கோபுராதிகளும் ஶுத்தஸத்வம் என்னும் உத்தமமான த்ரவ்யத்தால் அமைந்தது. இங்கு செல்லும் முக்தாத்மாக்களும் தங்களுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஏற்பட்ட ஸூக்ஷ்ம ஶரீரத்தைவிட்டுத் திவ்ய ஶரீரத்தையடைந்து,

'விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸஸ்ஸத்ய காமஸ்ஸத்யஸங்கல்ப:।' என்கிறபடி நிஜஸ்வரூபமடைந்து எப்போதும் லக்ஷ்மீ ஸமேதரான ஸ்ரீமந்நாராயணனுக்கே கைங்கர்யம் செய்வதே ஸ்வரூபமாக உடையவர்களும் ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா என்கிறபடி பகவானோடு ஸமமாக இருந்து அவனையே அநுபவித்துக்கொண்டு ஆனந்தஸ்வரூபமாகவே எப்போதும் ஆனந்தத்தை அநுபவிக்கிறார்கள். கர்ம ஸம்பந்தத்தால் ஏற்பட்ட க்லேஶம் முதலியவை ஒழிந்து இப்படிப்பட்ட மோக்ஷமாகிற உத்க்ருஷ்ட பதவியை அடையவேண்டுமென்று கோருவதில் மோக்ஷத்தின் ஸ்வரூபம் தெரிந்தவன் எவன்தான் ப்ரவர்த்திக்கமாட்டான்? அப்படிப்பட்ட மோக்ஷத்தை அடைய ஒருவன் ஸ்வ ஸ்வரூபஜ்ஞாநமும், தனக்கும் பகவானுக்குமுள்ள ஶரீர ஶரீரி பாவமும், ஶேஷ ஶேஷி பாவமும் அறிய வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட மோக்ஷத்தையடைய இரண்டே வழிகளைத் தவிர வேறில்லை.

> பூர்வஸ்மாதபி பூர்வஜம் ந விஶதி ஶ்ரோத்ரம் ஶ்ருதேர்நிர்வஹம்
> பூர்வஸ்ய த்விதயா ஸமாநவிதயாபீதிஸ்ஸகீயா ।
> விஶ்வம் வேத புருஷோத்தமம் நவஸமாநவயஸ்கஸம் விபாதவ்ய
> பாதஸ்யா ஶம் ப்ரபத்தி: பரிசிதா ஜீவிதம் ஶரணம் ॥

என்கிறபடி மோக்ஷத்தைக் கோரினவர், பக்தியாவது ப்ரபத்தியாவது செய்தாலொழிய மோக்ஷம் கிடையாது.

மேலே முதலில் சொன்ன பக்தி அல்லது உபாஸனையாவது ஒருவன் அநேககாலம் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மாநுஷ்டானங்களை வர்ணாஶ்ரமத்துக்கு அநுகுணமாகச் செய்து பகவானைக் குறித்து இடைவிடாது உபாஸனை செய்தல். அப்படிச்செய்யும் உபாஸநா ரூபமான த்யாநம் தைலதாரைபோல் விச்சேதமில்லாமல் த்யாநம் செய்தல். இந்த உபாயத்தைக் கையாண்ட மஹான்கள் அநேகம் பேர்களுண்டு. இதைக் கையாண்டவர்களுக்கு ந ததேஹாவஸாநே மோக்ஷபலம் கிடைத்துவிடு மென்பதில்லை. அவர்கள் ஏற்கெனவே செய்திருக்கும் கர்மாக்கள் ஒவ்வொன்றும் அதற்கு அநுகுணமான பலனைக் கொடுத்து முடிந்தபிறகு தான் (அதாவது அவர்கள் செய்த எல்லாக் கர்மாவையும் அநுபவித்தபிறகு தான்) இந்த உபாஸனையின் பலமான மோக்ஷம் உண்டாகும். இந்தமாதிரி பலன்கொடுக்க ஆரம்பித்த இந்த ஜந்மாவே பழைய கர்மாக்களின் அநுபவத்துக்குக் கடைசியாக இருக்கும்பக்ஷத்தில், இதன் முடிவிலேயே (இந்த ஶரீரம் விழுந்தவுடனேயே) மோக்ஷமுண்டு. இல்லையேல், அநேக ஜந்மங்களுக்குப் பிறகும் இருக்கலாம். அல்லது, இந்த உபாஸனைக்கு நடுவிலேயே அந்தராயம் ஏற்பட்டால் கோலின பலமில்லாமல் போனாலும் போகும். யாருக்கும் தெரியாது. ஆதலால், நம்மைப்போன்ற விளம்பாக்ஷமர்கள் இவ்வளவு ப்ரயாஸையான உபாஸனையில் இறங்கத் தகுதியற்றவர்கள். வ்யாஸர் முதலான விளம்பக்ஷமர்களே அதற்கு அர்ஹதையுற்றவர்கள். வ்யாஸர் முதலியோருக்கு உபாஸனை பூர்த்தியானாலும் ப்ராரப்தஸ்ய கர்மண: ஸமாப்திகாலாத் பலத்தைக்கொடுக்க ஆரம்பித்த கர்மாவானது முடிவடையாததால் அவர்கள் அதிகாரத்தை விட்டுப் போகமுடியவில்லை.

ஆனதால் இவ்வளவு ப்ரயாஸையோடு கூடியதும், மிகவும் தாமதித்துப் பலத்தைக் கொடுக்கக்கூடியதுமான உபாஸனையைக் கையாள்வது நம்மைப்போன்ற ஶக்தியற்றவர்களுக்கு முடியாததால், நம்பூர்வாசார்யர்கள் பரம கருணையுடன் நம்மை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக ஶ்ருதி, ஸ்ம்ருதி, புராணாதிகள்மூலம் நமக்கு மிகவும் ஸுலபமாக மார்க்கத்தை தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். யதி ஸ்யாத் ஸவிதே யாதா வாத்ரிம் கிமர்த்த: என்று ப்ரகரணாந்தரத்தில் சொல்லப்பட்டபடி ஸமீபத்திலுள்ள ஸுலபமான வழியைவிட்டு எவன்தான் மஹா ப்ரயாஸையான உபாஸனையில் இறங்குவன்? அப்படி ஸுலபமாகச் சொல்லப்பட்ட மற்றொரு வழிதான் ப்ரபத்தி அல்லது ஶரணாகதி. இந்த ப்ரபத்திக்கு லக்ஷணம்.

ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் |
ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸ: கோப்த்ருத்வவரணம் ததா |
ஆத்மநிக்ஷேபகார்பண்யே ஷட்விதா ஶரணாகதி: ||

என்கிற ஶ்லோகத்தால் சொல்லப்பட்டது.

ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: பகவானுக்கு அநுகூலமாயிருப்பதாய் ஸங்கல்பித்துக் கொள்ளுதல். அதாவது ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடியே நடந்துகொண்டு பகவானின்நிக்ரஹம் வராதபடி நடந்து கொள்ளுதல்.

ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் அதாவது பகவானின் ஆஜ்ஞையான ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதைத் தாண்டாமல் அவன் ஶரீரமான நாம் அவனுக்கு விரோதமானதை (அதாவது, அவன் நிக்ரஹத்துக்கு காரணமானதை) செய்யாமல் தவிர்த்தல்.

ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸ: நாம் பகவானைக் குறித்துச் சரணம் புகில், அவன் நம்மை ரக்ஷிப்பான் என்கிற மஹா விஶ்வாஸம் அவஶ்யம் இருக்கவேணும். நாம் பகவானை ப்ரார்த்திப்பதற்கு பலம் இருக்குமோ இருக்காதோ என்கிற சலந புத்தி கொஞ்சமும் கூடாது.

கோப்த்ருத்வவசணம்—அவனை அணுகி ரக்ஷிக்கவேணுமென்று ப்ரார்த்தித்தல் அவஶ்யம். லோக த்ருஷ்ட்யா ஒருவனை ப்ரார்த்தித்தாலொழிய ஒரு உபகாரத்தையும் எவனும் செய்யமாட்டானுகையாலும், அதைப்போலவே காகாஸுரன், கஜேந்த்ரன், விபீஷணன், த்ரௌபதி முதலியவர்கள் விஷயத்தில் அவர்கள் அநந்ய ஶரணர்களாக இருந்து பகவானை ரக்ஷிக்கும்படி ப்ரார்த்தித்த பிறகே பகவான் ரக்ஷிக்க முன் வந்ததாகத் தெரிகிறபடியால் நாம் பிரார்த்திக்க வேண்டியது அவசியம்.

கார்ப்பண்யமாவது தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியில்லாதவன் என்றும், தன்னுடைய ஆகிஞ்சந்யத்தை அறிந்திருக்க வேணும். உபாஸநையில் மூட்டிவிட்டால் அதை அனுஷ்டிக்கச் சக்தியற்றவனுகையாலும், வேறு எவ்வித உபாயாந்தர அனுஷ்டாநத்துக்கும் தான் தகுதியற்றவன் என்பதை உணர்ந்து தான் லகுவாகச் செய்யும் உபாயானுஷ்டாநத்தைத் திருவுள்ளம் பற்றி மஹாஶ்வாஸமான உபாயத்தை அநுஷ்டித்தால் எந்த மோக்ஷ பலம் கிடைக்குமோ அதை கொடுக்கும்படி ப்ரார்த்தித்தல்.

ஆத்மநிக்ஷேபமாவது மேலே சொன்ன ஐந்து அங்கங்களோடே கூட "எனதாவியு முனதே" "ஜீ நாய யடிஷுி யொஷூஹம் ஸகூஂ தஜி தவெவ ஊயவ" என்கிறபடி உன் ஸொத்தான இந்த ஆத்மாவை உன் சரணரவிந்தத்தில் ஸமர்ப்பித்தேன் என்கிற ஜ்ஞாநம.

இந்த ப்ரபத்தி உபாயத்தையனுஷ்டிக்க ஸகலமானவர்களுக்கும் அதிகாரமுண்டு. உபாஸனையிலோ த்ரைவணிகர்களுக்குத்தான் அதிகாரம் என்பது விஶதமாக அபஶூத்ராதிகரணத்தில் சொல்லப்பட்டுவிட்டது. இந்த உபாயமானது ஸுகரமாயும், ஸக்ருத் கர்த்தவ்யமா

யும், ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும், இஷ்ட ப்ராப்தியையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இது ஆர்த்தப்ரபந்நர் பக்கல் ஊ௵ பலனைக் கொடுத்து, ஊரப்தப்ரபந்தர் பக்கல் வஊ தஃஹாவஸாநெமோக்ஷத்தை அளிக்கும். இதில் உக்தி நிஷ்டைக்கும், ஆசார்ய நிஷ்டைக்கும் பலம் துல்யமே.

யெந கெநாவி ஞுகாரெண உபவகுா கூ௦ என்கிற ப்ரமாணத்தைக் கொண்டு ஏதானும் ஒரு விதத்தில் ப்ரபத்தி செய்து விட்டால் அதுவே உத்தாரகமாகும். இங்கு தேசிகன் ஸ்ரீ மத்ரஹஸ்ய த்ரயஸாரத்தில் "ஒரு மலையினின்று மொரு மலையிலே தாவும் ஸிம்ம சரீரத்தில் ஜந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸார லங்கனம் பண்ண அவரோடுண்டான குடல் துவக்காலே நாமுத்தீர்ணராவுதோ மென்று முதலியாண்டான் ஸாதித்தருளின பாசுரத்தையும்"

தவஹொாஹஃகாஷிபு யாஃபுமெகஃ ஶரணஃதூவிவாவஃ¬மெஹாயபு।
ஊதிவஸவாக்ஷிகயஞிஊஃஊ ஃா௦க¬ாா ஹா௦ தவ ாஜுய¬ாவா ‖

என்கிற ஸ்லோகத்தாலும்.

கூஸெோாநஸுஞுஹணவஶமொ யாதி ாஜெூஶ யதுக (ஊதூாஷி) உக்தி நிஷ்டைக்கும், ஆசார்ய நிஷ்டைக்கும் பலம் துல்யமானதென்று திருவுள்ளம் பற்றினர்.

ஜீவேஶ்வர ஸம்பந்தமும், ஜீவன் பரமாத்மாவுக்கே ஶேஷன் என்பதும், அதன் அயோகவ்யவச்சேதத்தையும், அந்யயோகவ்யச்சேதத்தையும், திருமந்த்ரத்திலும், பலாபேக்ஷாபூர்வக உபாய விஶேஷாநுஷ்டாநப்ரகாரத்தை த்வயத்திலும், ப்ரகாசிப்பிக்கப் பட்டிருக்கிறது. சரமஶ்லோகம், அநுஷ்டிக்கவேண்டிய இவ்வுபாயத்தை விதிக்கிறது. திருமந்த்ரம் தாரகமென்றும், த்வயம் போக்யமென்றும், சரமஶ்லோகம் போஷகமென்றும் சொல்வார்கள்.

இங்கு, பகவானின் ரக்ஷகத்வம் நிரபேக்ஷமாக இருக்கும், ஸாபேக்ஷமாக இருக்காது என்றும், நாம் அநுஷ்டிக்கும் இந்த அல்ப உபாயமானது அவன் கொடுக்கும் உத்க்ருஷ்டமான பலத்தின் அம்ஶாம்ஶத்துக்குக்கூட ஒத்துவராததால் இந்த உபாயத்தால் பலம் கிடைக்கிறதென்றும் சொல்லமுடியாது. ஆனல், அவன் ஸஹஜ காருண்யந்தான் பலத்துக்குக் காரணம். அதுவும் நிரபேக்ஷமானது என்கிற பலவிதமான ஒரு சாராரின் கக்ஷியை நம் தேசிகன் திருவுள்ளம் பற்றுமல் அப்படிப் பகவானின் ரக்ஷகத்வம் நிரபேக்ஷமாக இருக்கும் பக்ஷத்தில் அவனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யாதி தோஷங்கள் ஸம்பவிக்கும் என்றும் ஸ்வல்பவ்யாஜத்தைக் கொண்டே ரக்ஷிக்கிறுன் என்றும் திருவுள்ளம் பற்றினர்.

ஜராமரணமோஹ்யாதி மஷப்தெவ்யவ பத்த꞉ பத்த꞉ |
ஜமஜ்ஜீர்ணப்ராரவபெடூஷிந்ருஜா ஸம்ஸ்ருதிரஷவயா ||
மஜ்ஜெநாநுமஜ்ஜெநாஜ்ஞா யந்த்ர கூபஸ்தாம் மத꞉ |
யதைவ மோக்ஷாவதிரம்ஜ்ஞயிய꞉ வெஷவம் ஜமஜ ||

என்கிறபடி, நம் கர்ம ஸம்பந்தத்தால் ஜீவேஶ்வரஸ்வரூபம் தெரியாமல் உபாயாநுஷ்டாநம் செய்யாமல் மூடர்களாக இருக்கும்வரை "ஒழுகு சங்கிலியிலிட்டாப்போலே" என்கிற கணக்கிலே ஸம்ஸாரமாகிற கயிற்ருல் கட்டுண்டு, ஜகத்தாகிற ஆரக்கட்டையில் மாட்டப்பெற்று மாறி மாறி உழலவேண்டியதுதான். ப்ருஹ்மஸ்வரூபமும் அறிந்து, ப்ரபத்தியும் செய்து, அதனடியாக ஞானவானுகவும் ஆகிவிட்டால் உலகத்தின் அல்பத் தன்மை தோன்றி மோக்ஷார்த்தியாகவே ஆகிவிடுவோம்.

ஸாக்ஷாந் நாராயணோ தேவ꞉ க்ருத்வா மர்த்யமயீம் தநும் |
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா ||

என்கிறபடி நம் ஶாஸ்த்ரங்களில் பகவானே ஆசார்யர்களாக அவதரிக்கிருன் என்றிருக்கிறபடியாலும்.

யோ விஷ்ணௌ ப்ரதிமாகாரே லோஹபாவம் கரோதி ச |
யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகவாஸிநௌ ||

என்கிறபடி நம் ஆசார்யர்களிடம் மநுஷ்ய பாவம் கொண்டால் நரக வாஸம் விதித்திருப்பதாலும், ஸாக்ஷாத் பகவதம்ஶமான நம் ஆசார்யர்கள் நமக்கு உத்தாரகர்களாக அவதரித்திருக்கும் கணக்கிலே அவர்களை யிட்டு, உபாயாநுஷ்டாநம் செய்து, ஸம்ஸார பந்தத்தைவிட்டு விடுவித்துக்கொள்ளாமலிருப்பவருமுண்டோ?

மேலே சொன்ன விஷயங்களையிட்டு நம் விஶிஷ்டாத்வைதமத ஸித்தாந்தத்தின் சுருக்கமானது அபியுக்தர்களால் பின்வரும் ஶ்லோகத்தால் சுருக்கமாகவும் அர்த்தபுஷ்டியுடனும் எழுதப் பெற்றது இங்கு அத்யந்தம் உபபந்நமே.

ஸ்ரீமத்ராமாநுஜமுநியதே ஸ்ரீபதிர்ப்ரஹ்மநேதா
ஜீவாத்மாந꞉ ப்ரக்ருதிரிதி ச ஸ்ரீபதேர்தேஹபூதா꞉ |
ஸ்ரீமத்விஷ்ணும் ஶரணமயதாம் ஸர்வகர்மாதிநாஶ꞉
ஸ்ரீமத்விஷ்ணோ꞉ பாதமூலே கிங்கரத்வம் ச மோக்ஷ꞉ ||

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த சிரோமணி நெடுந்தெரு. ரா. பத்மநாபாசார்யர்

இயற்றிய

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமான

அந்தாதியின் பதவுரை

[ஸஞ்சிகை 8 : பக்கம் 282 : தொடர்ச்சி]

4. அறிந்தென்னு மவனருளே அம்புவியிற் *புகலின்றி
சிறந்தெங்கும் செலநின்ற செல்வமுடை வேங்கடவன்
அறந்திகழு மாமணியி னவதார மாங்குருவே
நிறைந்திங்கே இம்முனியாய் நிற்கின்ற துரைப்பேனே.

அம் புவியில் = அழகான பூமியில்,

புகல் இன்றி = மோக்ஷத்துக்கு வேறு உபாயம் இல்லையாதலால்,

என்றும் அவன் அருளே அறிந்து = எக்காலத்திலும் ஸ்ரீயːபதியினுடைய க்ருபையே மோக்ஷத்துக்கு உபாயம் என்றறிந்து உபதேசித்து,

சிறந்து எங்கும் செல நின்ற = அதனால் எங்கும் கொண்டாடத் தகுந்த கீர்த்தியை உடையவராயும்,

செல்வம் உடை வேங்கடவன் அறம் திகழும் மாமணியின் அவதாரமாம் = உபய விபூதி நாதனான திருவேங்கட முடையானுடையதும், தன்னுடைய நாதத்தால் பகவத் விரோதிகளைப் போக்கி, பகவதநுகூலர்களை வரவழைப்பதுமான திருமணியின் அவ மாயும் இருக்கும்,

குருவே = ஆசார்யனான வேதாந்த தேசிகனே,

இங்கே இம்முனியாய் நிறைந்து நிற்கின்றது உரைப்பேனே = இங்கே அஹோபிலமடத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகனைப் பரிபூர்ணமான அம்சத்துடன் எழுந்தருளி யிருப்பதாகச் சொல்வேன்.

குறிப்பு :—அம்புவி - பூமிக்கு அழகாவது, ஸகல விதமான ஸுக துக்கங் களுக்கும் உபாயமான புண்ய பாபங்களை ஸம்பாதிக்க யோக்யமா யிருத்தல். 'புகலென்று' என்று பாடமானபோது—அவனருளே அம்புவியில் புகலென்றறிந்து உபதேசித்து, என்பது பொருள். 'செல்வமுடை' என்பதை 'குருவே' என்ப தோடும் கூட்டி, வேத வேதாந்தங்களுடைய ஜ்ஞானம் என்னும் ஸ்ரீயோடு கூடின வேதாந்த தேசிகனே என்றும் பொருள் கொள்ளலாம்.

கருத்து—ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன், ஸகலருக் கும் சரணாகதி மார்க்கத்தை உபதேசித்து, யாவரும் ஸ்ரீய:பதியினுடைய

---

* புகலென்று—என்றும் பாடாந்தரம்.

திருவடிகளையே சரணமாகப் பற்றி உஜ்ஜீவிக்கும்படி செய்தருளும் திறமையைப் பார்த்தால், ஸ்வாமியைத் திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோனுடைய பரிபூர்ணமான அம்ஶத்தோடு கூடிய அவதாரம் என்று நிஸ்ஸம்சயமாகச் சொல்லலாம்.

அவதாரிகை—இப்படி ஸ்வாமியை ஸ்ரீ பாஷ்யகாரருடைய அவதாரம் என்று கீழே, இரண்டாவது பாசுரத்தில் ப்ரதிஜ்ஞை செய்ததற்கு அபிப்ரேதமான ஹேதுவை இதில் வ்யக்தமாக அருளிச் செய்கிறார்.

5. உரைத்ததன்னுத் தமகுணமே உய்வதென்று தன்னருளால்
கரந்தெங்கு மோங்கிறைவன் கலியாண குணங்களையே
உரைக்கின்ற பாடியத்தை உம்பர்தொழ வெப்பொழுதும்
உரைக்கின்றமாமுனியை உரைத்துரைத்தின் றுயர்ந்தேனே.

உரைத்த = வேதங்களில் சொல்லப்பட்டவையும்
தன் = ஸ்வாபாவிகமானவையுமான
உத்தம குணமே = ஶ்ரேஷ்டமான ஸர்வேஶ்வரனுடைய கல்யாண குணங்களையே (சிந்தித்து)
உய்வதென்று = யாவரும் பிழைக்கவேண்டும் என்கிற
தன்னருளால் = தன்னருள் நிறைந்த திருவுள்ளத்தால் (இதற்கு பாடியத்தை யுரைக்கின்ற என்பதோடு அந்வயம்)
கரந்துஎங்கும் ஓங்குஇறைவன் = எங்கும் வியாபித்து இருந்தும், அவைகளால் அறிய மாட்டாதவனாயும் அவ்விடங்களில் உள்ள தோஷங்களோடு ஸம்பந்தமில்லாதவனாயும் விளங்குகிற ஸர்வேஶ்வரனுடைய
கலியாண குணங்களையே = கல்யாண குணங்களையே ப்ரதானமாக
உரைக்கின்ற பாடியத்தை = சொல்லுகிற ஸ்ரீ பாஷ்யத்தையும், கீதா பாஷ்யத்தையும்,
உம்பர் தொழ எப்பொழுதும் = தேவர்களும் அல்லது பூமிக்குத் தேவர்களான பிராமணோத்தமர்களும் வணங்கிக் கேட்கும்படியாக உசிதமான எல்லாக் காலங்களிலும்,
உரைக்கின்ற மாமுனியை = உபதேசம் செய்தருளும் ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனை
உரைத்துரைத்து = 'ஶ்ரீநாராயணேதி ஸதா ஜபேத்' என்கிறபடியே எப்பொழுதும் சொல்லிச் சொல்லி.
இன்று உயர்ந்தேன் = இதற்கு முன்பில்லாத மேன்மை பெற்றேன்.

கருத்து—வேதத்தில் ப்ருஹ்மம், ஸ்வாபாவிகமாயும், அளவற்றதாயும் உள்ள கல்யாண குணங்கள் நிறைந்ததாகச்சொல்லப்பட்டிருந்தும், ப்ருஹ்மத்துக்குக் குணம், ஒன்றுமே கிடையாதென்றும், குணங்கள் எல்லாம் ப்ருஹ்மத்தினிடத்தில் அஜ்ஞானத்தாலே ஏறிடப்பட்டன; ஆகையால் அவைகள் பொய் என்றும் ஶங்கர பாஷ்யத்தில் சொல்லி யிருப்பது போல் இல்லாமல், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியே ப்ருஹ்மத்

திற்குக் கல்யாண குணங்கள் அளவற்றவை என்றும், இயற்கையாயுள்ளவைகள், என்றும் தெரிவிக்கும் பகவத் ராமானுஜ பாஷ்யத்தைப் பலதடவை வெகு அழகாக உபதேசித்து, பெருமாளுடைய கல்யாண குணங்களை யாவரும் சிந்தித்து வாழும்படி செய்தருளின ஸ்ரீமதாதி வண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருநாமங்களை எப்பொழுதும் பக்தியுடன் ஜபித்தால் யாவரும் போற்றத்தகுந்த பதம் பெறலாம்.

அவதாரிகை—கீழே, 4-வது பாசுரத்தில் ஸ்வாமியை ஸ்ரீ தேசிகனுடைய அவதாரம் என்று ப்ரதிஜ்ஞை செய்ததற்கு அபிப்ரேதமான ஹேதுவை இதில் வ்யக்தமாக அருளிச் செய்கிறார்.

6. உயர்ந்தென்று முத்தமனாய் உதவும் சீர்த்திருமாலின்
பயந்தவிர்க்கும் மெய்ப்பதமே பதமென்று பேசுகின்ற
மயர்வில்லா மூன்றினது மாசறு சீர்ச்சாரமெங்கும்
உயர்பெறுத்தும் யோகிபதம் உற்றதல்லால் மற்றிலனே.

என்றும் உத்தமனாய், உயர்ந்து = எக்காலத்திலும் எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாய் அழிவில்லாத மேன்மையுடனிருந்துகொண்டு,

உதவும் = உலகத்தை ரக்ஷிக்கும்,

சீர்திருமாலின் = தயாநிதியான ஶ்ரிய:பதியினுடைய

பயம்தவிர்க்கும் மெய்ப்பதமே = எல்லாவிதமான பயத்தையும் போக்குவதாயும், எக்காலத்திலும் அழிவில்லாததுமான ஸ்தானமே

பதம் என்று = முமுக்ஷுக்களுக்குத் தகுந்த ஸ்தானம் என்று

பேசுகின்ற = சொல்லுகிற

மயர்வுஇல்லா மூன்றினது = ஸ்ரீய:பதியால் வெளியிடப்பட்ட மந்த்ரங்களாகையாலே வக்த்ருத்வாரகமான அஜ்ஞானஸம்பந்த மில்லாததான (அஷ்டாக்ஷரம், த்வயம், சரம ஶ்லோகம்) என்கிற மூன்று மந்த்ரங்களுடைய

மாசறு சீர் சாரம் = அனுஸந்திப்பவர்களின் தோஷத்தைஅடியோடுஅழிக்கும் சீர்மைபெற்றதான ஸாரார்த்தத்தை—அதாவது ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம் முதலிய ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்தங்களை

எங்கும் உயர் பெறுத்தும் = எல்லா இடங்களிலும் மேன்மைபெற்று விளங்கும்படியாக உபதேசம் செய்த

யோகி பதம் = ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருவடிகளை

உற்றது அல்லால் மற்றிலனே = ஸகல ஶ்ரேயஸ்ஸுகளுக்கும் உபாயமாக அங்கீகரிப்பதைத்தவிர வேறு உபாயத்தை விரும்பமாட்டேன்.

கருத்து—"ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்" என்னும் ஸ்ரீ தேசிகனருளிச்செய்த க்ரந்தத்தை சிஷ்யர்களுக்கு உபதேசித்து, அதனால் அஷ்டாக்ஷரம் முதலிய மூன்று மந்த்ரங்களில் சொல்லியிருக்கும் அர்த்த பஞ்சகங்களுடைய அறிவை யாவர்க்கும் உண்டாக்கித் தேசிகன் திருவுள்ளம் குளிரும்படி செய்த ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருவடிகளை வணங்கி வழிபடுவதே ஸ்ரீ தேசிகன் ப்ரீதியைப் பெறுவதற்குச் சிறந்த உபாயம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வைஷ்ணவி விஜயம்

[ஸ்ரீமதீ ராஜலக்ஷ்மி அம்மாள், பேங்களூர்]

[ஸஞ்சிகை 8 பக்கம் - 277 தொடர்ச்சி]

அவள் சரமாரியாய்ப் பக்தி பரவசமாய்ப் பொழிந்த பொருள்கள் எவருக்கு விளங்கினவோ தெரியவில்லை. ஆனால் ஸௌமித்ரையின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் அப் பாடல்களும் அவற்றின் பொருட்செறிவும் பதிந்தன. அன்று இரவெல்லாம் அவள் அவற்றை எண்ணி எண்ணி இன்பக்கடலில் மூழ்கினாள்.

மறுதினம் ஸௌமித்ரையும் தோழிகளும் பகவதியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவள் வரவேயில்லை. அதன் காரணத்தை அறியமுடியாது கவலையுற்றனர். வைஷ்ணவியின் பெயரையும், இருப்பிடத்தையும் ஒருவரும் அறியவில்லை. மற்றப் பெண்கள் அவள் ஒரு பிச்சைக்காரி என்றும், ஆதலால் அவளைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவேண்டாம் என்றும் எண்ணித் தத்தம் கார்யங்களிற் கருத்தைச் செலுத்தினார்கள். நம் பாலகியோ ஆஹாரமும் நித்ரையு மின்றி வருந்தினாள். இவள் அநுபவிக்கும் மன வேதனையைப் பார்த்த பெற்றோர்கள், அவ் வைஷ்ணவியை ஊர் முழுவதும் தேடினார்கள்; ஆனால் அவளைக் காண முடியவில்லை. அவள் திடீரென்று எங்குச் சென்று மறைந்தாளோ? அதை ஒருவரும் அறியவில்லை.

அநேக ஆண்டுகள் சென்றன. பல ருதுக்கள் மாறி மாறிவந்தன. ஒரு பாத்ரத்திலுள்ள தண்ணீர் ஸூர்ய வெப்பத்தால் குறைந்து கொண்டே வருவதுபோலவும், ஓர் ஓட்டைக் குடத்திலுள்ள தண்ணீர் பிறருக்குப் புலப்படாமல் ஒழுகிப்போவதுபோலவும், ஒவ்வொருவருடைய ஆயுட் காலமும் நாள்தோறும் குறைந்துகொண்டேவருகிறது. அத்ருஷ்டமுடையவர்கள் இவ்வுலகில் தாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து தம் ஜந்மத்தைப் பயன்பெறச் செய்கின்றனர்.

மறுநாள், ஸௌமித்ரை பதியின் ஸமீபம் செல்லும் மங்கள தினம். அன்று பல நற்சகுனங்கள் தென்பட்டன. அவை வீண்போகவில்லை.

“தோக்கிலங்கு யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கின்றி புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக்கோட் டம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே!

என்னும் தேவகானம் ஸுமித்ரையின் செவிக்கு இன்பப் பாலூட்டியது. "ஆம்; அதே பகவதியின் குரல்; என தன்னை வந்துவிட்டாள்" என்று எண்ணிப் பறவைபோல் பறந்தோடினாள். தன் மனக் கோயிலில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கும் அத்தேவியை வணங்கினாள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரியச் சரீரம் புளகாங்கிதமடையத் தன்னை மறந்து நிற்கும் கண்மணியைக் கட்டியணைத்து ஆசீர்வதித்தாள் பகவதி. அவளுடைய கண்களில் அன்பும் அருளும் பிரகாசித்தன. ஸுமித்ரையே அவளிடம் கொண்ட பக்தியினால் மனமுருகப் பரவசமடைந்தாள்; ஸ்ரீமந் நாராயணனைக் கண்ட த்ருவ குமாரன் அடைந்த பேரானந்தத்தையே அவளும் அடைந்தாள்; அவளால் பேச முடியவில்லை. வைஷ்ணவியோ தான் விதைத்த விதையில் ஒன்று முளைத்துச் செடியாய் வளர்ந்திருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி யுற்றாள். இதில் தோன்றும் கனிகள் பிற ஜனங்களுக்குப் பயன்படுமென்று எண்ணினாள். பெண் மணியின் உள்ளத்தில் ஒரு பரமரஹஸ்யத்தைப் பதியவைக்க விரும்பினாள்.

"என் செல்வமே! நாளை தினம் நீ புக்ககம் செல்லுகிறாயல்லவா? உன்னைப் பார்த்துவிட்டுப் போகவே வந்தேன்" என்றாள்.

அவளுடைய அன்பு ததும்பும் சொற்களைக் கேட்டவுடன் ஸுமித்ரை அத்யாஶ்சர்ய முற்றாள். "இவள் ஓர் ஸாதாரணமான ஸ்த்ரீயல்ல; நீறுபூத்த நெருப்புப்போல் பிக்ஷுக்கள் வேஷத்திலிருக்கிறாள்; தபோ மஹிமையினால் ஸித்தியடைந்தவள்" என்று எண்ணினாள்.

"பகவதி! உம்மை வெகுகாலமாகக் காணவில்லையே. மற்றொரு முறை உம்முடைய கீதத்தைக் கேட்கவும், உம்மை ஸேவிக்கவும், பாக்யம் செய்திருக்கவேண்டும். இந்நாளைப்போல் நன்னாளை நான் கண்டதேயில்லை. என் விண்ணப்பம் ஒன்றுண்டு. உமக்கு ஸம்மதமாயின் மற்றைப் பாடல்களின் கருத்துக்களையும் கூறவேண்டும். மேலும் 'சரண மடையுங்கள்' என்று ஒவ்வொரு பாடலின் முடிவிலும் உபதேசித்தீர்களே. அதை எவ்விதம் செய்வது? யார் யார் செய்யவேண்டும்? நீவிர் சொல்லும் பாடல்களைப் பாடிப் பெருமாளை ஸேவித்தால் போதுமா? திருவாய்மொழியில் உபதேசிப்பது நமக்கு ப்ரமாணமா? அது வேதத்தைப்போன்ற மஹிமையுடையதாகுமா? இவைகளை க்ருபை கூர்ந்து கூற வேண்டுகிறேன்," என்று ஸுமித்ரை புகன்றாள்.

ஆஶ்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் வைஷ்ணவியின் கண்கள் மலர்ந்தன. அதரத்தில் புன்னகை தவழ்ந்தது. "என் கண்ணே! உன் உத்தம புத்தியை நான் எவ்விதம் மெச்சுவேன்! அடுக்கடுக்காய் ஸாரமான கேள்விகளைக் கேட்டிருக்கிறாய். ஒவ்வொன்றும் விலைமதிக்க முடியாத மாணிக்கமாகவன்றோ இருக்கிறது? உனக்கு அத்ருஷ்ட காலம் பிறந்ததினாலன்றோ இத்தகைய உத்தம விருப்பம் உனது உள்ளத்தில்

உதித்தது? மானிடரின் அறிவு எப்பொழுதும் ஏகரீதியாக இருப்பதில்லை. தம் மதி மாறுவதற்குள் அவர்கள் நினைத்ததைச் செய்யவேண்டும். ஏதோ பெரியோர்களிடம் கேட்டுத் தெளிந்ததை அறிந்தவரையில் கூறுகிறேன்,'' என்று கூறி அப்பகவதி அருகிலிருந்த மேடைமேலமர்ந்தாள்.

"குழந்தாய்! கவனமாய்க்கேள். புருஷோத்தமன் ஒருவனே யஜமானன். அவன், ஒருவருக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டாம். மற்றை ஜீவன்களெல்லாம் எம்பெருமானுடைய கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டிய வேலைக்காரர்களாவர். பகவானுடைய எண்ணங் களையும், உத்தரவுகளையும் ஶாஸ்த்ரமாகிய ப்ரகாசமான விளக்கினால் அறி லாம். அவ்விதம் அவற்றை அறிந்து 'கீழ்ப்படியாததனால் ப்ரபுவின் சினத்திற்குப் பாத்ரர்களாயிருக்கிறோம். குற்றம் செய்தவர்கள் தண்டனை யடைய வேண்டுமல்லவா? ஆகவே, மாறி மாறி நாய், நரி, பசு, பறவை, விலங்கு, மானிடர், தேவர் முதலியவைகளாகப் பிறந்து, பசி பிணி மூப்பு முதலிய பல துன்பங்களை அநுபவிக்கிறோம். அதை நிவர்த்திக்கும் உபாயம், பெருமாள்கொண்ட கோபத்தை ஶாந்தமாகும்படி செய்வதே. அதுவே சரணாகதி; அதாவது, 'நான் வெகுகாலமாய் உன் உத்தரவை மீறிக் கணக்கற்ற பாபங்களைச் செய்தேன். அவற்றைப் போக்கிக்கொள் ளும் வழியை நானறியேன். கால முள்ளளவும் அநுபவித்தாலும் என் பாபச்சுமை கடுகளவும் குறையாது. ப்ராயஶ்சித்தங்கள் செய்ய எனக்கு அற்ப சக்தியும் கிடையாது. உன்கருணை வெள்ளத்தினால் என் பாப பர்வ தங்கள் மூழ்கடிக்கப் படவேண்டுமல்லது வேறு வழியில்லை. என்னை மன்னித்து ஆட்கொள்ளவேண்டும்' என்று இறைஞ்சிக் கேட்டுக்கொள் வதுதான். இவ்விதம் செய்தால், இப்பிறப்பின் முடிவில் ஒவ்வொருவரும் பகவான் வஸிக்கும் பரமபதம் செல்வோம். இவ்விடத்தில் துக்கம் ஒரு சிறிதும் கிடையாது. பசி, தாகம், மூப்பு, மரணம், சோகம், மோஹம் இவை நம்மைத் துன்புறுத்தா. எப்பொழுதும் நாம் ஆநந்தத்தையே அநுபவிக்கலாம்.

"இவ்வுபாயத்தைப் பிறந்த குழந்தை முதல் தள்ளாத முதியோர் வரையில் ஸகல ஜாதிகளும் கையாளலாம். திட நம்பிக்கையும், ஆசையு மிருப்பதே யோக்யதை. ஆஹாரம் அனைவருக்கும் இன்றியமையாதது. ஆனால் பசித்தவர்களே புசிப்பார்கள். நோய்வாய்ப் பட்டவர்களுக்கு ஆஹாரம் தேவையில்லை.

"சிலர் ஆஹாரம் தயாரிக்கும் திறமையுடையவர்களாக இருக்கி றார்கள். அதைச் செய்யச் சக்தியற்றவர்கள் பிறர் சமைத்து அளித்த தைப் புசிக்கிறார்கள். அதுபோலவே, சக்தியுடைய மஹான்கள் எம்பெரு மான் திருவடித்தாமரைகளில் தாமே சரணாகதி செய்கின்றனர். சக்தி யற்ற நாம் மஹான்களாகிய ஆசார்யர்களை அடுத்து ப்ரார்த்தித்தால், அவர்கள் சாஸ்த்ரத்தில் விதித்தபடி நமக்குச் சரணாகதி செய்வித்து நற்

கதியளிப்பார்கள். அவர்கள் உபதேசித்த மந்த்ரங்களையும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்த ஸ்ரீ ஸூக்திகளையும் தினந்தோறும் அநுஸந்திக்கவேண்டும்.

"திருவாய்மொழி வேதத்தைக் காட்டிலும் பதின்மடங்கு அதிக மேன்மை பொருந்தியது. இதிஹாஸம், புராணம், ப்ரபந்தம் முதலியவைகள் வேதத்தைப்போல் 'இதைச் செய். அதைச் செய்யாதே,' என்று கண்டிப்பாய்க் கட்டளை இடமாட்டா. ஆனால் நம்மை மெய்ம்மறக்கச் செய்து, அவைகளின் உபதேசப்படி செய்விக்கும் வன்மை உடையவை. வேதத்தின் கருத்துக்களையே இன்பமாய் நமக்கு எடுத்துப் போதிக்கும் வல்லமை வாய்க்கப்பெற்றவை. பகவந் மாயையாகிய திரையை அகற்றிவிடுவதுபோல் நமது உள்ளத்தில் மிதக்கும் அஜ்ஞானம், அவநம்பிக்கை, ஸந்தேஹம் முதலிய பாசிகளை விலக்கித் தெளிவுறச் செய்யும் திறமையுடையவை," என்று அவ் வைஷ்ணவி உபதேசித்தாள்.

உடனே ஸுமித்ரை "பகவதி! நீர் தயவுடன் எடுத்துரைத்தவற்றைத் தெரிந்துகொண்டேன். இது ஒன்று எனக்கு ஸந்தேஹமாக இருக்கிறது. 'வேதம் ஒருவராலும் அருளிச் செய்யப்படாதது, உத்தமமான தேவ பாஷையிலுள்ளது. அவ் வாக்யங்கள் தாம் ஆஸ்திகர்களுக்கு ப்ரமாணம்' என்றல்லவோ கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றாள்.

"ஆம்; வேதங்கள் மேன்மை பொருந்தியனவே. கரும்பு சுவையுடையதென்றால் கற்கண்டு குறைந்ததாகுமோ? வேதங்கள் புகழும் பகவான் ஒப்புயர்வற்றவர். அப்பரமபுருஷன் மத்ஸ்யம், கூர்மம், வராஹம் முதலிய தாழ்ந்த அவதாரங்கள் எடுத்தாலும் அப்பகவானை அவற்றின் தாழ்மை அணுவளவும் அணுகா. அதேபோல் வேதங்களின் அர்த்தங்கள் எவ்வடிவமெடுத்தாலும் எப்பாஷையி லெழுதப்பட்டிருந்தாலும் அவற்றின் மஹிமை ஒரு சிறிதும் குறையாது. மேலும் தமிழ் மிகவும் சிறப்புப்பொருந்திய அகஸ்த்ய முனிவரின் பாஷை. பாடிய மஹான்களோ நித்யஸூரிகளின் அவதாரங்கள். ஆதலால் உனக்குத் திருவாய்மொழியின் மேன்மையைப்பற்றி அணுவளவும் ஐயம் வேண்டாம். அதை நாம் பொன்னேபோல் போற்றவேண்டும். நாம் துதித்துக் கடைத்தேறுவதின் பொருட்டே அஜ்ஞானலேசமும் இல்லாத ஆழ்வார்கள் தம் தெளிந்த ஞானக் கண்களால் கண்டு களித்து அநுபவித்தவற்றைத் திருவாய்மொழியாக வெளியிட்டனர்" எனப் பகவதி விடை பகர்ந்தாள்.

"பகவதி! உம் உபதேசத்தினால் மனந் தெளிந்தேன். இன்னுமொரு விண்ணப்பம் உளது. சரணாகதி அடைதல் எனும் உபாயத்தை அவரவர்களே ப்ரார்த்தித்துச் செய்துகொள்ள வேண்டுமோ? அல்லது தத்தம் குழந்தைகள் பந்து மித்ரர்களுக்காக ஆசார்யர் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கலாமா?" என்று ஸுமித்ரை வினவ, அதற்கு அவ் வைஷ்ணவி, "அவஶ்யம் ப்ரார்த்திக்கலாம். தம் பாதுகாப்பிலிருக்கும் அறி

பாத குழந்தைகளுக்கு, அவைகள் வேண்டாவிடினும், நீராட்டி ஆடை யுடுத்திப் பாலூட்டி வளர்ப்பது போலவும், பக்துக்கள் நோய்வாய்ப்பட்டுச் சக்தியற்று நினைவின்றி இருக்கும் தருணம் அவர்களுக்கு வேண்டிய உதவிசெய்து தக்க வைத்யர்கள் மூலம் சிகித்ஸை செய்வது போலவும், அவர்கள் சக்தியற்ற காலத்தில் ஹிதத்தைக் கோருபவர்கள் ஆசார்யர்களிடம் ப்ரார்த்தித்துச் செய்து வைக்கவேண்டிய கடமை. நம்மை யடுத்த பசு பக்ஷிகளுக்கும் செய்து வைக்கவேண்டுமென்பது பெரியோர் வாக்யம். இச் சரணாகதியை மோக்ஷத்திற்காக மட்டும் செய்யவேண்டுமென்பதில்லை. புத்ரன் பணம் பதவிபோன்ற காம்ய பலங்களில் இச்சை யுடையவர்களும் செய்து, வேண்டும் பயனை அடையலாம். அல்லது பரமபதம் சென்று பகவானுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டுமென்று செய்தாலும் கூட இவர்கள் வேண்டாமலே ஆரோக்யம் ஐஶ்வர்யம் முதலியவற்றை எம்பெருமான் அருளுவர். அதையேதான் ஒன்பதாம் பாட்டில் குலசேகராழ்வார் அருளிச் செய்கிறார். எட்டாம் பாட்டில், தண்ணீரானது ஆறுகளில் ஓடியும் குளம் தடாகம் கிணறு இவைகளில் தங்கியும், முடிவில் கடலையே அடையுமாப்போல், ஸகல ஜீவராசிகளும் எத்தனை ஜந்மங்களடைந்து எத்தெய்வங்களைப் பூஜித்தாலும், இறுதியில் புருஷோத்தமனுடைய பாதபங்கஜங்களையே அடையும். ஸமுத்ரம் போன்ற நீலமேகஶ்யாமளனுடைய கலியாண குணங்களை மனத்தினால் சிந்தித்து வாயினால் பாடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்றார். சரணாகதி யடைந்தால் பகவானுக்கு மூண்ட சினம் தணிந்து அளவற்ற அன்பு ஏற்படுகிறது. பகவத் ப்ரீதிக்குப் பாத்ரமாகிய தங்யர்களுக்கு ஸகல ஸுகங்களும் கிட்டும். " ஒன்பதாம் பாட்டில்,

'நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்ப னடியேனே.'

என்று கூறப்படுகிறது.

'உன் திருவடித் தாமரை நிழலில் ஒதுங்கி உனக்கே கைங்கர்யம் புரிய இச்சைகொண்டு சரணாகதி செய்தவர்களையே பெருஞ் செல்வமும் விரும்பி அடையுமாப்போல், உன் மாயையால் என்னை நீ அடிமை கொள்ளாவிடினும், உன் பொன்னடி யல்லது மற்றொன்றும் விரும்பேன். ஆஶ்ரிதரைக் காக்கும் பொருட்டே மின்னும் சக்ரத்தாழ்வானும் திருக் கையுமாய் வந்து, "வித்துவக்கோடெனும் திவ்ய தேசத்தில் கோயில் கொண்ட என் ஸ்வாமியே! உன் திருவடித் தாமரைகளில் சரணமடைந்த தங்யர்களையே தநமும் விரும்புகிறது. மோக்ஷ லக்ஷ்மியைத் தொடர்ந்து அஷ்டலக்ஷ்மியும் முன்னடைந்து வருகிறார்கள்,' என்று குலசேகரப்

பெருமான் அருளிச்செய்திருக்கிறார். அவர் பாடிய இப்பத்துப் பாடல்களையும் பக்தியுடன் பாடுபவர்கள் ஒருநாளும் நரகத்தை எட்டிப் பார்க்க மாட்டார்கள்.

"இப் பாடல்களிலுள்ள உலகநீதிகளைப் பார். ஒவ்வொன்றும் விலைமதிக்க முடியாத ரத்நத்தைப் போன்றது. பெற்றதாயின் ஸ்வபாவமாகிய வாத்ஸல்யமும், குழந்தை அவளிடம் கொள்ளும் அன்பும், புருஷன் தன் பார்யையை ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பும், பதிவ்ரதையின் பரிசுத்தமான காதலும், அரசனுடைய நீதியும், குடிகள் கொள்ளவேண்டிய பொறுமையும், வைத்யனுடைய சிகித்ஸையும், நோயாளனுடைய உண்மையான நம்பிக்கையும், நன்றியறிதலும், நம் சிற்றறிவுக்கு எட்டும்படி போதித்திருக்கிறார்.

"கண்ணே! நான் போய் வருகிறேன். இவ்வருமையான பாடல்களை மறக்காமல் தினந்தோறும் பாடுவாய். உனக்கு க்ஷேமமுண்டாகும்," என்று விடை பகர்ந்தாள்.

"தாயே! எனக்குச் சரணாகதி செய்துகொள்ளும் அத்ருஷ்டம் எவ்விதம் கிடைக்கும்? எனக்கு ஆசையை உண்டாக்கிய போழ்தும், அதற்குரிய உபாயத்தை உபதேசிக்கவில்லையே. அவ்வுத்தம கதி எனக்குக் கிடைக்கவேண்டுமே" என்று மறுபடியும் ஸௌமித்ரை கேட்க, அதற்குப் பகவதி, "உன் ஆசை வீணாகாது. பகவானுடைய கருணை வடிவமாகிய திருமங்கை நிறைவேற்றி வைப்பாள். கணவனுக் குகந்த காதலியாய் வாழ்வாய்," என்று வாழ்த்திக் கூறி விடைபெற்றுச் சென்றாள்.

நூதந தம்பதிகளுள் வாஸம் செய்யும் க்ராமம் மிக்க ரமணீயமான ப்ரதேசம்; சுற்றிலும் செழித்துத் தழைத்த மாந்தோப்பு; ஓங்கி வளர்ந்த தென்னஞ்சோலை; நறுமணம் கமழும் புஷ்பத் தோட்டம்; தெளிந்தோடும் காவிரி தீர்த்தம்; இருவரிசையாக அமைந்த வீடுகள்; தெருக்கோடியில் சிங்கப்பிரான் கோயில்; அவர்களுடைய இன்ப வாழ்க்கைக்குக் குறைவுமுண்டோ?

ஸௌமித்ரா தன் நாதனை ப்ரத்யக்ஷ தெய்வமாகவே எண்ணி வந்தாள். பணிவிடை செய்வதில் வேலைக்காரியாகவும், ஆலோசனை கூறுவதில் மந்த்ரியாகவும், உபதேசம் செய்வதில் ஆசார்யராகவும், ஆஹாரம் அளிப்பதில் அன்னையாகவும், போகம் தருவதில் இஷ்ட நாயகியாகவும் விளங்கினாள். ஸௌம்யனோ தெய்விகக் காதலுடனும் அளவு கடந்த அன்புடனும் அவளைப் பாதுகாத்து வந்தான். ஸீதாதேவியும்—இராமபிரானும், ஸாவித்ரியும்—ஸத்யவானும், அநஸூயையும்—அத்ரியும், அருந்ததியும்—வஸிஷ்டரும் போல் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ

வேண்டுமென்று கல்யாண காலங்களில் பெரியோர்கள் ஆசீர்வதிப்பது இத் தம்பதிகளிடம் பலித்தது போலும்.

புருஷனுக்குப் பணிவிடை செய்யவும், குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்குமாக மட்டும் பெண்கள் ஸ்ருஷ்டிக்கப்படவில்லை. ஸ்த்रீக ளுக்கும் புருஷர்களைப்போல் ஆத்மா அறிவு முதலியவைகளும் மன மொழி முதலிய கரணங்களும் உண்டு. உயர்தரக் கல்வி வேண்டுமென வும், பல துறைகளிலும் உரிமைகளும் உத்யோகங்களும் வேண்டுமென வும் ப்ரஸங்கம் செய்யும் தோழிகளின் கக்ஷியை ஏனோ ஸௌமித்ரை பின் பற்றவில்லை. ஆகவே, அவர்கள் இல்லம் சிறியதாக இருந்தாலும் பரி சுத்த அழகும் மங்களக்களையும் பொருந்தி விளங்கியது.

ஸௌமித்ரை குளிக்கும்போதும் மற்ற வீட்டு வேலைகள் செய்யும் போதும் ஸதா ஸந்தோஷமாய் அச்சிறந்த பாடல்களையே பாடுவாள். கன விலும் நனவிலும் சரணாகதி எவ்விதம் கிடைக்குமென்றும், எப்பொழுது பிராட்டியின் க்ருபையைப் பெறக்கூடுமென்றும் ஏங்குவாள்.

ஒரு நாள் அவள் ரவிக்கை தைத்துக்கொண்டே ஸ்வாரஸ்யத்து டன், 'கண்டாரிகழ்வனவே' என்று தொடங்கும் பாடலைப் பாடிக்கொ ண்டிருக்கையில் தற்செயலாக ஸௌம்யன் வீட்டிற்கு வந்தான். திடீ ரென்று தன் நாதன் புன் சிரிப்புடன் எதிரில் நிற்பதைக் கண்ட ஸௌமி த்ரை திடுக்கிட்டு எழுந்து நாணித் தலை கவிழ்ந்தாள்.

"ஆஹா! இருக்கமாட்டார்களா? பசி தாஹமில்லாமல் பாது காத்து, ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து க்ருஹ லக்ஷ்மிகளாய் எண்ணிக் கொண்டாடும்பொழுதே 'நாமென்ன அடிமைகளா? பெட் டியா? படுக்கையா? பெண்களுக்கும் ஸம உரிமையும் ஸ்வதந்த்ரமும் தேவை; உயர்தரக்கல்வி அவசியம்' என்று வழக்காடுபவர்கள், கண்டா ரிகழும் வண்ணம் காதலன் வைதால் கொண்டானை யல்லவோ போற்றிப் புகழ்வார்கள்! அத்தகைய குலமகள் க்ருத த்ரேதாயுகங்களில் இருந்தி ருப்பார்களே யல்லாமல் இக்கலியுகத்தில் மருந்துக்கும் கிடைப்பதரிது," என்று ஸௌம்யன் கூறினான்.

உடனே ஸௌமித்ரை, "அவ்வித அபிப்ராயம் ஏன்? மற்ற யுகங் களிலும் அஸத்துக்கள் இல்லாமலில்லை, கலியுகத்திலும் சில ஸத்துக்களி ருப்பார்கள். அத்தருணங்களிலும் பகவான் அவதரித்துப் பயிரில் உள்ள களைகளைக் களைந்தார், இக்கலியிலும் ஆழ்வார் ஆசார்யர்கள் தோன்றி உலகத்தைச் சீர்திருத்தினார்கள். எவ்வளவுதான் தர்மம் குலைந்திருந்தாலும், கஸ்தூரி வைத்த சிமிழைப்போல் பாரத பூமியில் இன்னும் சில பதிவ்ரதைகள் வஸிப்பதனாலேயே காலத்தில் மழை பொழிந்து அன்னமும் தீர்த்தமும் கிடைக்கின்றன." என்று பதிலளிக்க, அதற்கு ஸௌம்யன், "ஸரிதான்; கோபங்கொள்ளாதே; உன்னைப்

போல் சிலர் இருக்கலாம். நீ இனிமையாகப்பாடிய போதிலும், என் பாட்டின் உபமானத்துடன் நிறுத்திவிட்டாய்?'' என்று மறுபடியும் வினவினன்.

''அது ஸர்வஸாரமாகிய சரணுகதிப்பாட்டு; குலசேகரப் பெருமான் பாடிய மதிப்பற்ற மாணிக்கம். 'விண்தோய் மதிள் புடைசூழ் வித்துவக்கோட்டம்மா, நீ கொண்டாளாயாகிலும் உன் குரைகழலே கூறுவனே' என்பது பாட்டின் பின் இரண்டு அடிகள். இவ்விதம் பத்துப் பாடல்கள் உண்டு. ஒவ்வொன்றையும் வெவ்வேறு ராகத்தில் பாடுவேன்'' என்று அவள் விடையளித்தாள்.

ஸௌம்யன் அவளை உடனே அப்பாடல்களைப் பாடும்படி கூறி அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான். ஸுமித்ரை அவனுக்கு நேரமாகிவிட்டதாகவும், இரவில் ஸாவகாசமாகப் பாடுவதாகவும் கூறிய போதிலும், ஸௌம்யன் தன் உத்யோக சாலைக்குப் பிற்பகலில் விடுமுறை என்று சொல்லி அவளை அத்தருணமே பாடும்படி தூண்டினன்.

இக்காலம் எப்பொழுது வாய்க்குமோ என்று மேகத்தை நோக்கும் சாதக பக்ஷியைப்போல், பிராட்டி க்ருபையை எதிர்பார்த்திருந்தவள், கிடைத்த தருணத்தை வீணுக்குவாளோ? உளம் பூரித்த அம்மதி நிறைந்த மங்கை ஆநந்தத்துடன் பாடல்களைப்பாடி அவற்றின் பொருட்செறிவையும் நன்ருக உணர்த்தினள். ஸௌம்யனும் பரவசத்துடன் கேட்டான். அவனுள்ளத்தில் ஓர் அற்புத உணர்ச்சி எழுந்தது; தலை தன்னையறியாமல் ஆடியது; மலர்ந்த மதிமுகத்துடன் எழுந்து நின்று, ''ஸுமித்ரா! வெகு ஶ்லாக்யம்; சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து ததும்புகின்றன அப்பாடல்கள். அவற்றிற்கு மெருகு கொடுக்கிறதுபோல் இருக்கின்றன உன் இனிய குரலும், பாவமும்'' என்று புகழ்ந்தான்.

ஸுமித்ரா சிறிது வெட்கத்துடன், ''ஐயோ! இது என்ன பாட்டு? என்ன உருக்கம்? என் வைஷ்ணவியின் பாட்டின்முன் மற்றைப் பாடல்கள் ஆதவனுடைய ஒளியில் ஏற்றப்பட்ட தீபங்கள் போலவே'' என்ருள்.

''அவள் யார் உன் வைஷ்ணவி? தெய்வ மங்கையைப்போல் புகழ்கிருயே. அவளுக்கு யாரிடம் சிக்ஷை?'' என்று ஸௌம்யன் கேட்க, அதற்கு அவள், ''அவ்வன்னைக்கு யாரிடம் சிக்ஷையோ எனக்குத் தெரியாது. அவர் பிக்ஷை எடுத்துப் பிழைப்பவர். சாந்தமே வடிவெடுத்து வந்ததோ என்றும், கருணையார்கலியோ என்றும் எண்ணத்தக்க பெருமை வாய்ந்த அவர் திருமகளின் அம்சமென்றே கருதுகின்றேன். அவர் ஸங்கீதமும் தேவகாநத்திற்கு மேற்பட்டதே'' என விடையளித்தாள்,

இதைக் கேட்டவுடன் அவன் நகைத்து, "அவள் உன்னை எந்த மாய மந்த்ரத்தால் மயக்கினளோ தெரியவில்லையே. பிச்சைக் காரியின் பாட்டில் மோஹத்தைக் கொண்டாய், அப்பாடகியிடம் உனக்கு சிக்ஷை போலிருக்கிறது. இருந்தபோதிலும் உன் பாட்டு நன்றாகவே இருக் கிறது," என்று உரைத்தான்.

இச்சொற்களைச் செவியுற்று ஏதமடைந்த மங்கை, "ஆலோசிக் காமல் பேசுவது நன்றன்று. வீதியில் கிடக்கும் வைரத்திற்கு விலை இல்லையா? என்னை எவ்வளவு வேண்டுமாயினும் ஏளனம் செய்யுங்கள். ஆனால் அத்தேவியைப்பற்றிய இகழ்ச்சியை ஒரு சிறிதும் பொறுக்க மாட்டேன்" என்று வருத்தம் கலந்த குரலில் கூறிக் கண்ணீர் பெருக் கினர். இதைக்கண்ட ஸௌம்யன் இரக்கமுற்று, "அடாடா, கண்களில் நீர் ததும்புகிறதே; கண்டம் அடைக்கிறதே; இது என்ன ஆச்சரியம்? விளையாட்டு வினையாகும்போல் தோற்றுகிறது," என எண்ணி, அவளைப் பார்த்து "எனக்கு வைஷ்ணவியைத் தெரியாது. உன் பக்தியை நான் ஏன் கெடுக்கவேண்டும்?' என்று கூறித் தேற்றினன்.

"அது போகட்டும்; பாட்டும் பொருளும் அழகாய் இருந்து என்ன உபயோகம்? அப்பாடல்களை ஆசரித்தாலல்லவோ அவற்றிற்குப் பெரும்பயன் ஏற்படுகிறது. உதார ஹ்ருதயம் படைத்த நமது ஆழ்வாராசாரியர்கள் நமக்கு லகுவான மார்க்கம் காட்டி யிருந்தும் நாம் கண்மூடித்தனமாய் ஓர் ஆழமான பள்ளத்தில் விழுவது எவ்வளவு மதியீனம்? என் வைஷ்ணவியின் வார்த்தைகளில் நம்பிக்கையில்லா விட்டாலும் மஹான்களை வேண்டித் தெரிந்துகொள்ளலாமே," என்று அவள் கூற, ஸௌம்யன், "தக்க ஸமயத்தில் அவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கலாம். இப்பொழுது என்மனம் அதை நாடவில்லை," என்று கூறி எழுந்தான். (தொடரும்.)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபானுஸ்ரீ புரட்டாசிமீ

1உ	வியாழன்	— கந்யாஸங்க்ரமணம், சுக்லாஷ்டமி திதி.
5உ	திங்கள்	— ஏகாதசி வ்ரதம். ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்ரம்.
9உ	வெள்ளி	— மஹாளய பக்ஷம் ஆரம்பம்.
12உ	திங்கள்	— மஹாபரணி.
16உ	வெள்ளி	— மத்யாஷ்டமி.
20உ	செவ்வாய்	— ஏகாதசி வ்ரதம்.
23உ	வெள்ளி	— மஹாளய அமாவாஸ்யை.
24உ	சனி	— நவராத்ரி ஆரம்பம்.
28உ	புதன்	— ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமி திருநக்ஷத்ரம்.
30உ	வெள்ளி	— சுக்ல ஸப்தமி திதி.

ஸ்ரீ:

காரயித்ருத்வ நிரூபணம்

(ஸ்ரீ உப. வித்வான் மதுராந்தகம் வீரராகவாசார்யர்).

[ஸஞ்சிகை 8: பக்கம்-291 தொடர்ச்சி]

(2) "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி" இத்யாதியாக உள்ள இரண்டு வாக்யங்களுக்கும் ஸ்ரீ பாஷ்யகாரரைப்போலவே ஆசார்யனும் தாத்பர்யங் கொண்டிருக்கிறார். அதாவது, இவை அத்யந்தாநுகூல ப்ரதிகூல விஷயங்கள் என்பதாக "ஸாபராதேஷ்வ ந ஹந்தா:" என்கிற ஸாராவளி ஶ்லோகத்திலுள்ள "தஸ்மாத்யோ நிநீஷாஸ்வேச்சயாஸ்வார்த்தக்ரூராந் ஸம்ஸாரமேவம் ஸதம்" என்கிற வாக்யத்திற்கு வ்யாக்யாநம் செய்யுமிடத்தில், "யம் ப்ரஸந்நோ ஸ்வாநுக்ரஹவாந் ஊர்த்வம் பகவாநயோ நிநீஷதி தஸ்மாந்ஸாது கர்ம காரயதி, யம் ப்ரகுபிதோ நிக்ரஹவாந் அதோ நிநீஷதி தேநாஸாது கர்ம காரயதி" என்கிற சிந்தாமணி ஸ்ரீ ஸூக்திகள் இங்கு அவதேயங்கள். "ஸாபராதரான ஆத்மாக்கள் தாங்களே புரியும் அவஸ்தையில் "தேஷாம் ஸததயுக்தாநாம்....இத்யாதிகளிற்படியே ஈஶ்வரன் பண்ணும் ஹிதப்ரவ்ருத்திகளில் க்ருபாபலம் கண்டுகொள்வது", என்பதாக விரோத பரிஹாரத்திலே ஆசார்யனும் அருளிச்செய்தார். இங்கு புரியும் அவஸ்தையாவது "புரிந்து மத வேழம்" "புரிந்து மலரிட்டு" இத்யாதிகளில்போல் தம்மோடு ஸம்ஶ்லேஷ விசேஷாபேக்ஷையையுடைய நிலை. இந்நிலையிலுள்ள அதிகாரி விசேஷத்திலே ஸாதுகர்மாவைச் செய்விக்கிறான் என்றதனால் அத்யந்தம் அநுகூலனான அதிகாரியே அவன் என்பதாக ஆசார்யனுக்கு விவக்ஷிதமென்று தேறுகிறது.

லகு ஸித்தாந்த தத்வடீகையில் இந்த ஶ்ருதியை ஆசார்யன் விவரணம் செய்திருக்கிறார். அதாவது—"ஸாது கர்ம சப்தமானது பொதுவாக எல்லாப் புண்ய கர்மங்களையும் போதிக்குமேயாகிலும் ப்ரதர்தநனுடைய வாக்யத்தில் மனிதனுக்கு ஹிததமத்தைப்பற்றிய ப்ரஶ்நம் ஏற்படுவதால், உபாஸநமே ஸாக்ஷாந்மோக்ஷோபாயமாகையால் அதுவே ஹிததமம்' என்று ஏற்படுகிறது. "மாமுபாஸ்வ" என்று உபதேசிக்கப்பட்ட உபாஸநமே இங்கு ஸாது கர்ம சப்தத்தினால் விவக்ஷிதம். "உதாதி ஸம்பதியோமதம்" இத்யாதி வசநத்தினால் விசேஷித்து அந்த ஸாது கர்மகாரயித்ருத்வம் சொல்லப்பட்டது என்பதாக. இதனாலும் "தேஷாம் ஸததயுக்தாநாம்பஜதாம்" என்கிற வசநத்தில் ஸததயுக்த சப்தத்தினாலும் பஜநசப்தத்தினாலும் சொல்லப்பட்டஅதிகாரி விசேஷமேஶ்ருதியில் விவக்ஷிதமென்று தேறுகிறது. அதற்குமேல் அஸாதுகர்மமாவது உபாஸநோத்பத்தி ப்ரதிபந்தகமாய் பகவானுடைய வைமுக்யத்தைக் கொடுக்கும் கர்மம் என்பதாக விவரணம் செய்து "தாநஹம் த்விஷத: க்ரூராந்" இத்யாதி ப்ரமாணத்தை உதாஹரித்திருப்பதால், அத்யந்த ப்ரதிகூலாதிகாரி விசேஷமே இரண்டாவது ஶ்ருதி வாக்யத்திற்கு விவக்ஷிதமென்றதாகிறது. "யமதோ நிநீஷதீதி யாவத்த்வேந கஸ்யசித்விஷ்ணுத்வேஷ: கோ நிநீஷா ஹேதுபூதவாஸநாவிசேஷம் வ்யநக்தி" என்கிற மேல் வாக்யத்திலே அத்யந்த ப்ரதிகூலாதிகாரி விசேஷமே இரண்டாவது ஶ்ருதி வாக்ய விவக்ஷிதம் என்பதை ஸ்பஷ்டமாகக் காட்டியருளினர். ஆகையால் அத்யந்தாநுகூல விஷயம் "ஏஷ ஹ்யேவஸாது கர்ம காரயதி"

என்கிற முதல்வாக்யம்; அத்யந்த ப்ரதிகூல விஷயம் மேலுள்ள "ஏஷ ஏவா ஸாது கர்ம காரயதீ"தி வாக்யம் என்பதாகவே ஆசார்யனுடைய நிர்ணய மென்பது ஆசார்யனுடைய ஸ்வோக்திகளாலும், "தயிஹாயோ நிர்ஷோஹூேத ஸாத்யக்ஷூ.நாமேவம் ஹது" என்கிற ஸாராவளி ஸூக்தி வ்யாக்யாநங் களாலும் ஸ்பஷ்டமாகின்றமையால் ஸ்ரீபாஷ்யகாராதி பக்ஷமே ஆசார்யனுடைய பக்ஷமும் என்று தெளிவாகிறது.

இங்கு ஸித்தாந்த ஸாரமாவது—" சேதநாசேதநங்களிரண்டுக்குமிப்படி ஸாமான்ய கமான வேஷந்தானே நியந்த்ருத்வம் என்பதாக பரமத பங்கத்தில் பரதத்வாதிகாரத் திலே ஆசார்யன் அருளிச் செய்திருக்கிறார். இதனல் காரயித் ருத்வம், ப்ரேரகத்வம், நியந்த்ருத்வம் இவைகள் பர்யாயங்கள் என்று ஏற்படுகிறது. இந்த நியந்த்ருத்வ மானது ஸாதாரணம் என்றும், அஸாதாரணம் என்றும் இரண்டுவிதம். ஸாதாரண நியந்த்ருத்வமானது ப்ரதமப்ரவ்ருத்தியுட்பட எப்பொழுதும் உண்டு. உபேக்ஷகத் வத்திற்கும் இதற்கும் விரோதமில்லை. ஹிதா ஹித ப்ரவ்ருத்திக்களுக்குப் பொதுவான காரணங்களாகிய கரணகளேபராதிகளைக் கொடுப்பது முதலியவற்றல் அவ்வழியில் ஈஶ்வரன் சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாதாரணமான காரயிதாவென்றும், நியந்தா என்றும், ப்ரேரகன் என்றும் வ்யவஹரிக்கப்படுகிறன். " இந்த சேதநன் பாபத்தைச் செய்யவேண்டும் என்ருவது புண்யத்தைச் செய்யவேண்டும் என்ருவது விசேஷ ஸங்கல்பம் அப்பொழுது கிடையாது. பொதுவாக "தனக்கு இஷ்டத்தைச் செய்யக் கடவன்" என்பதே ஈசுவரனுடைய அப்பொழுது ஸங்கல்பம். இம்மாதிரி யான ஸாமாந்ய ஸங்கல்பாதிகளினல் ஸாமாந்யத: காரயிதாவாயும், நியந்தாவாயும், ப்ரேரகனகவும் ஈஶ்வரன் ஆகிறன் என்பதை ஸ்ரீதேசிகனும் ஶ்ருதப்ரகாசிகாசார்ய ப்ரப்ருதிகளும் ஏக கண்டராகவே அங்கீகாரம் செய்கிறர்கள். விசேஷித்து நியம நத்தை ஸர்வ ஜீவ ஸாதாரணமாக ஶ்ருதப்ரகாஶிகாசார்யரைப்போல் ஸ்ரீதேசிகனும் ஜீவன் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் இசையவில்லை; ஸாமாந்யத காரயித்ருத்வத் தினல் விதி நிஷேதாநர்த்தக்யம் ப்ரஸங்கிக்கமாட்டாது ! என்பதே "ஶ்ரேயஸ்ஸும் யாவதா நஸ்யாதியா நவ்ருத்திஷேயோ:| நியந்த்ருத்வ ஶ்ருதேஸ்தா வாநு ஸஜ்ஞோஷோ நக்ஷதஃவாரு" என்கிற ஶ்ருதப்ரகாஶிகாவசநத்தின் (பராயத்தாதிகரணம்) தாத்பர்யம். ஸாமாந்யத: ரூபமாகவும் விசேஷ ரூபமாகவும் இரண்டு விதமான நியந்த்ருத்வங்களுள் ப்ரதம தசையில் ஸாமாந்யத: நியந்த்ருத்வமே என்று ஸங்கோசம் செய்வதையே இந்த ஶ்லோகத்தில் குறிப்பிடுகிறர். அந்த தசையில் நியந்த்ருத்வமே கிடையாது பிறகுதான் உண்டு என்று தாத்பர்யமில்லை. விசேஷத: காரயித்ருத்வமும் அத்யந்தாநுகூல ப்ரதிகூல விஷயங்களில் முதலிலேயே எம்பெருமானுக்கு உண்டு என்பதும் ஶ்ருதப்ரகாஶிகாசார்யருக்கும் இஷ்டம் ".ஏ.க்ஷ்யஶம் விஶேஷாவகாஶம் ப்ரயத்னவ கேஷாஞ்சித்ஸ்வாஶ: கரோதி தத்ர ப்ரயோஜயித்ருத்வம்' என்கிற ஶ்ருதப்ரகாஶிகாவசநத்தினல் இது ஸ்பஷ்டமாகிறது. "ஏஷஹ்யேவ ஸாது கர்ம" என்கிற ஶ்ருதி யிந்நிஷ் கர்ஷத்திற்கு ப்ரமாணம். ஸ்ரீதேசிகனுக்கும் இவ்விஷயமும் அபிமதமே.

ஆகையால் ஸாமாந்யத : காரயித்ருத்வத்தை ப்ரதம ப்ரவ்ருத்தி தசையிலும், அதிகாரி விசேஷத்தில் முதலிலேயே விசேஷத : காரயித்ருத்வத்தையும் ஏக கண்ட ராய் ஆசார்யர்கள் கொண்டிருக்கிறர்கள் என்பதாகவே அடியேனுடைய நிர்ணயம். "ஆஸுர ப்ரக்ருதிகள் விஷயத்தில் மோஹ நேச்சையானது குணமே" என்பதாக மூன்ருவது விஷயத்திற்கு ஸமாதாநத்தை அடுத்த ஸஞ்சிகையில் விக்ஞாபநம் செய்கிறேன்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

[ஸ்ரீ உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்]

(1)

ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவிண்ணகர் மங்களாசாஸநம்

ஸ்ரீ அழகிய சிங்கர் திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதாழ்வானை மங்களா சாஸநம் செய்தபிறகு அதற்கு ஸமீபத்தில் மண்ணிவிது போல நகரில்லை எனவானவர்கள் தாம்மலர்கள் தூய், நண்ணி உரைகின்ற' நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே என்னும் நந்திபணி செய்த நகர் நந்திபுரவிண்ணகரமென்றும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடியே நந்திகேச்வரனால் நிர்மாணம் பண்ணப்பட்ட திவ்ய தேசத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ஜகன்னாதனை ஸேவித்து அங்கு ஸ்ரீ வானமாமலை மடத்து ஸ்வாமியின் நியமனத்தினால் ஷை ஸ்வாமி சிஷ்யர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களால் அத்யாச்சர்யமாக உபசரிக்கப்பெற்றபிறகு அதற்கு ஸமீபத்தில் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலிய திவ்ய ஸூரிகளால் மங்களா சாஸநம் பண்ணப்பட்டதாய் தன்னிடம் வசித்த சில ப்ராணிகளை மாத்திரம் ரக்ஷிக்கும் திருவயோத்யை போலன்றிக்கே தக்ஷிண தேச வாஸிகளான ஸர்வ ப்ராணிகளுக்கும் ரக்ஷகமாக யிருக்கையாலே தென் சரண் திசைக்கு திருவிண்ணகர் என்று மயர்வற மதிநல மருளப்பெற்ற நம்மாழ்வா ராலருளிச் செய்யப்பட்டதாய் மின்னப் பொன்மதிள் சூழ்திரு விண்ணகர் என்றும், திண்ணமாடங்கள் சூழ்திரு விண்ணகர் என்றும், சிகரமாடங்கள் சூழ்திரு விண்ணகர் என்றும், தேனார் பூம் புறவில் திருவிண்ணகர் என்றும் தாரார் மலர்சகமலத்தடம் சூழ்ந்த தண்புரவில் என்றும் அருளிச் செய்கிறபடியே ஒப்பிலியப்பனுடைய திருவாராதனத்திற்குபயுக்தங்களான போக்ய போகோபரண போகஸ்தானங்கள் நிறைந்த மணிமாட மாளிகைகளினாலும் மண்டபாஸ்தானங்களினாலும் வண்டினம் முறலும் சோலை என்கிறபடியே நித்ய புஷ்ப பழங்களையுடைய கல்ப வ்ருக்ஷங்கள் சூழ்ந்த திவ்யோத்யானங்களினாலு மலங்க்ருதமா யிருக்கையாலே பௌம ஸ்வர்க்க மென்னலாம்படி இருக்கையாலும் இங்ஙனன்றிக்கே. “க்ஷுத்த்ருஷ்ணாதிவிநாஶம் தத்வம் பரம் ஸர்வம் ஸர்வதா த்ருப்திகரம் ஶ்ரேஷ்டம்” என்கிறபடியே புநராவ்ருத்தியில்லாத நித்யானந்தமான மோக்ஷத்தைத் தரகூடியதாய் ரஸாயநௌஷதம்போல வுபாய தசையிலும் இச்சுவை தவிர என்னும்படி இனியதான பக்தியோகானுபவத்தை தத்ஸத்ருஶமாய் அவ்விஷயத்திலறிவிலிகளாய் சக்தியில்லாத சோம்பேரிகளும்பற்றே லொன்றுமிலேனென்று புலம்பி யழாதபடி த்வயோபபுக்தஸ்ரக்கந்த வாஸோலங்கார சர்சிதா: | உச்சிஷ்டபோஜினோ தாஸாஸ்தவ மாயாம் ஜயேமஹி || என்கிறபடியே ஒப்பிலியப்பனுடுத்துக் களைந்த பீதாம்பரத்தை தரித்து அவனுண்டு மிகுந்த மூட நெய் பெய்து கன்னலமுதையும் ஸர்வ கந்தனணிந்த சந்தனத்தையும் சுருளமுதையும் அனுதினமு மனுபவித்து ‘ந கிஞ்சிதவிகாரேண விஷ்ணோராயதநே வஸேத்’ என்கிறபடியே கடைத்தலையிருந்து வாழப்பெற்ற மாத்ரத்தினாலேயே மோக்ஷமளிக்கும் திவ்ய தேசமாக இருப்பதாலும் இந்த திவ்ய தேச மகிமையை கண்ணாரக்கண்ட தேவதைகள் மின்னனைய நுன்னிடையாருருப்பசியும் மேனகையும் அன்னவர் தம் பாட லாடலோடு கூடிஇருக்கச் செய்தேயும் மேலே

வரப்புகுகிற பிறப்பிறப்புப் பிணிபசி மூப்புத் துன்பங்களுக்கஞ்சி நாம் என்ன காரியம் செய்தோம்? நாம் வேண்டும் பெரும்பயன் வீடென்றறியாதே ஓமப் புகையாலே ஒளி யழிந்த கண்களோடு உப்பிலியும் பட்டினியுமான வ்ருதங்களைச் செய்து ரம்பா ஸம்போகாதி ஸுகங்களை அடைந்தாலும் மறுபடியும் கர்ப்பவாஸம் முதலிய கஷ்டங்களை யனுபவிக்க வேண்டுமே இப்படி காயோடு நீடுகனி யுண்டுநை நுகடுங்கால் நுகந்து நெடுங்காலமைந்து தீயோடு நின்று தவம் செய்யாமலே பாரத பூமியினுடைய ஓர் பாகமான திருவிண்ணகரில் சோம்பராய் வாஸம் பெற்ற மாத்திரத்தினாலே கர்ப்பவாஸாதி ஸர்வ கஷ்டங்களொழிந்து அந்தமில் பேரின்ப மனுபவிக்கப் போகிற மனிதர்கள் என்ன புண்ணியம் செய்தார்களோ என்று திரு விண்ணகரை தோத்திரம் செய்து நிற்கையாலே தேவர் மேவித் தொழும் திருவிண் ணகர் என்றருளிச் செய்யப்பட்டதாய் தேனும் பாலும் கன்னலுமமுதும் போலினிய தாய் விரஜா நதி என்னலாம்படி கங்கையிற் புனிதமாய் காவிரி நதியின் கிளை யாராகப் பிரிந்து தெளிந்த சீதள ஸுக ஸ்பர்சமானதிறை கைய்யாலாடி வருடும் திருநாட்டாறு என்று ஸுப்ரஸித்த வைபவமுடைய திவ்ய நதியினாலும் சூழப் பட்டிருக்கையாலே தெண்திறைப் புனல்சூழ் திருவிண்ணகர் என்றருளிச் செய்யப் பட்டதாய் தத்விப்ராஸோ விபந்யவ: என்றும் ஸதா என்றும் சொல்லுகிற படியே இசை லேச மில்லாமையாலே செவிக்கினிதை சப்தமயமாய் எம்பெருமா னுண்டுமிழ்ந்த எச்சில்களான தேவஜாதிகளுடைய ஸதோத்ர ப்ராபமான் வேத வாக்யங்கள் நிறைந்த விண்ணகர் போலன்றிக்கே செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் என்கிறபடியே இணையில்லா இன்னிசையோடு கூடிய், யாழின் கான ரஸத்தோடும், குழலின் மலியச் சொன்ன பாசுரங்களாகையாலே செவிக் கினிய செஞ்சொல்லென்று ச்லாகிக்கக்கூடிய சொல்லழகோடும் மறந்தும் புறந் தொழாது மாதவன் சீறே நிறைந்திருக்கையாலே புண்ணியத்தின் புகலிடமான பொருளழகோடும் சேர்ந்திருக்கையாலே தொண்டருக்கமுதாக வுண்ணலாம்படியாய் திருமாலுக்கும் தித்தித்திருக்கும் ஸர்வாதிகாரமான திருவாய் மொழிகளையும் வாக்யம் மேயம் வ ஸ்வயா மென்றும் ரஸை: ச்ருங்காரகாருண்ய ஹாஸ்யவீரபயாநகை: ரௌத்ராதிபிஸ்ச ஸம்யுக்தம் காவ்யமேதத் என்றும் சொல்லுகிறபடியே பக்தியை விளைவிக்கும் கான ரஸானுபவத்திற்கு யோக்யமாய் ச்ருங்காராதி ஸர்வ ரஸ ஸம்பூர்ணமான வால்மீகி கோகிலா லாபங் களையும் அனுபவிக்கின்ற பக்தர்களும் பகவர்களும் பழமொழியாய் முனிவர்களும் புகழ்ந்து பாடும் திவ்ய தேசமாக விருக்கையாலே விண்ணோர் திறல்களால் வணங்கு மென்றருளிச் செய்தபடியே நித்ய முக்தர்களாலும் தெண்டனிட்டு தொழப்படும் திவ்ய தேசமாய், வேதம் தமிழ் செய்த மாறன் முதலான திவ்ய ஸூரிகளின் தன்னை கண்ணாரக் கண்டனுபவிக்க வாசையினால் ஒரு நாள் காண வாராயே என்றும் ஆண்டாயுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல் என்றும் பலபடியாக நாதழும்ப கூவிக் கூவி நெஞ்சுருகிக் கண்பனிச் சோற ஏங்கி யிளைத்து நின்று எண்ணாராத்துயர் விளைக்கும் மண்ணுலகில் வளிக்க வாசையில்லாது தாங்கா துள்ளம் தள்ளுமென் தாமரைக்கண்ணா வென்றும் தருதுயரம் தடாயேல் நின்சர ணல்லால் சரணில்லை என்றும் நின்னருளே புரிந்திருந்தேன் களைகண் மற்றிலேன் என்றும் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் சாதக பக்ஷிபோல் விண்ணை நோக்கி ஆகிஞ்சந்யம் தோற்ற அண்ணுற்றிருப்பதைக் கண்டு ஸஹிக்காத திருவுள்ள முடையனான ஸர்வேச்வரன் வைகுண்ட தேசவாஸிகளான நித்யமுக்தர்கள் தன்னோடு துல்யபோகராக விருக்கையாலே தன்னை யாதரிக்க வேண்டாதபடி நிரபேக்ஷரா யிருப்பதையும் கண்டு தனக்கு தௌர்லப்ய தோஷத்தைத்தரும் வைகுண்ட வாஸத்தை வெருகது ஸௌலப்யகுண ஸம்ருத்தியை கதரும் தான திருவிண்ணகரில் நித்யவாஸ ரஸிகனாய் ஸம்ஸாரி சேதனர்களை ஸம்ரக்ஷித்தருளுவதி லாஸ்தையோடு எழுந்தருளின படியாலே தன்னொப்பாரில்லப்பனென்று திருநாமம் பூண்டு விளங்குவதோடு அவன் திருவுள்ளமுகந்த திவ்ய தேசமாகையாலுங் கீழே சொன்ன குணாதிசயங்களாலும், செல்வம் மல்கு குடித்திரு விண்ணகரே நன்னகர் என்று மயர்வறமதி நலமருளப் பெற்ற நம்மாழ்வார் கொண்டாடினபடியே ஒப்பில்லாத திவ்யதேச வாஸியான ஒப்பிலியப்பன் திருவடி தொழுவதி லாஸ்தையாலே அத்திவ்ய தேச வாஸிகளான ஸ்ரீ உ. வெ. வித்வான் லக்ஷ்மீ நரஸிம்மாசாரியர் ஸ்வாமி முதலான ஸ்ரீ வைஷ்ணவர் களுடைய ப்ரார்த்தனையின்படியே அத்திவ்ய தேசத்திற்கருகில் தேவனார் விளாக

மென்கிற திருவீதியிலிருக்கும் ஸ்ரீ உ. வே. வித்வான் லக்ஷ்மீநரஸிம்மாசாரியருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

மறுநாள் காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் அபிகமனாந்தங்களான ஆன்னிக கார்யங்களை அனுஷ்டித்து பிறகு திருவிண்ணகர் ஸன்னிதி பரிஜனங்கள் வந்து மங்களாசாஸநத்திற்காக பிரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல பரிஜன பரிச்சதங்களோடும் பேரீ - மத்தள - ம்ருதங்க - வீணா - வேணு முதலிய வாத்ய கோஷங்களோடும் அருமறைக ளவைநான்கும் வேள்வியைந்தும் அங்கங்க ளவையாறு மிசைக ளேழும் வல்லவர்களான வேதியர் குழாங்களோடும் வானவர் தம்மை யாளுமவனும் நான்முகனும் சடைமுடி யண்ணலும் செம்மையா லவன் பாதபங்கயம் சிந்தித் தேத்தித் திரியு மெம்பிரானுடைய பாதம் பணியுவதர்க்கேற்ற ஜாதீ சம்பக மல்லிகா மாலதீ பாரிஜாத புஷ்ப மயங்களான திருமாலைகளோடும் தெங்கொடு மாங்கனி கதளி கமுகு வெற்றிலை கூடிய உபஹார வர்க்கங்களோடும் அடிவழகார்ந்த திருமேனிக்குரிய திவ்ய பீதாம்பரங்களோடும் புறப்பட்டு கடல் வேலை போன்ற நெடுவீதி நடுவே எழுந்தருள இந்புரமிலங்கும் காய்த்தநீள் கமுகும் கதளியும் தெங்கும் பலாவும் கரும்பு மயமான தேவோத்யானங்களில், கொம்பினார் பொழில்வாய் குயிலினம் கோவிந்தன் குணம்பாடுசீர் என்னும் அணியம் பொழில்வாயிருந்து வாழ் குயில்கள் அரி, யரி, என்னழைப்ப என்கிறபடியே நற்பாலயோத்தியில்போல சீர்கலந்த பேருறைக்கும் திர்யக்குக்களைக் கண்டுகந்து திருத்தேர்க்கு எழுந்தருளி ஸ்ரீ சடகோபனை ஸ்ரீ புஷ்கரிணி ஸமீபத்தில் கோவில் பரிஜனங்கள் பூர்ண கும்பத்துடன் எதிர் கொண்டழைக்கக் கண்டுகந்து சிரஸா வகித்து திருத்துழாய் மாலை முதலிய பகவத் ப்ரஸாதங்களை எல்லாம் பெற்று கிருதார்த்தமான மனதுடையராய் அதிசீதள மதுரசந்தன ஸித்தமாய் முக்தாமயங்களான திவ்யதோரணாலங்க்ருதமாய் மஞ்சுசேர் மாளிகையதில் புகையும் மறையோர் செம்சொல் வேள்விப் புகையும் கமழுமதாய் மணிமாட மாளிகைக ளிருபுறமும் பூரண பொற்குடம் நிறைந்த திருவீதியில் நிதியும் நற்சுன்னமும் நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏத்திவ றெதிர்கொள்ள தெங்குமாங்கனி கதனி கமுகிலை கைக்கொண்டு அந்த மூன்று மனலோம்பு மந்தணர்கள் பல்லாண்டு கொண்டேத்த திருக்கோபுரத்தருகே சென்று திவ்ய புஷ்கரிணியில் ப்ரோக்ஷண சமநங்களைச் செய்தருளி அங்கெழுந்தருளி இருக்கும் வேதாந்த தேசிகாதிகளான ஆசார்யர்க ளடிபணிந்து த்வாரபாலகர்கள் திருவடி தொழுது ஸர்வேச்வரனையும் ஸாஷ்டாங்கமாக ஸேவித்து பின்னிட்டச்சையானும் பிரமனு மிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய நீள் வாசலினுள்ளே புகுந்து அங்கு குன்றுடு கொழுமுகில்போல் குவளைகள்போல் நின்றுடு கணமயில்போல் நிறமுடைய நெடுமாலென்கிறபடியே மைத்தெழுந்த மாமுகில்போல் ஸர்வ ஸந்தாப நாசகமான ஒப்பிலியப்பனுடைய தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும் திருமேனியை கண்ணாரக் கண்டுகளித்து வாயார வாழ்த்தி கைகளாலாரத்தொழுது முடியினிற்படியே மனோரதித்திருந்த வனுபவங்களை எல்லாம் கரணத்ரயங்களாலும் யதார்ஹமாக வனுபவித்து தாம் கொண்டுவந்த பீதகவாடை முதலிய உபஹாரங்களை எல்லாம் ஸமர்ப்பித்து க்ருதார்த்தனாய் சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவா யொன்றினோடும் செல்கின்ற தென்னெஞ்சமே என்கிறபடியே திவ்ய திருமேனியினுடைய அவயவ ஸௌந்தர்யங்களினால் இழுக்கப்பட்ட மனஸையுடையவராய் பகவத்யான ஸோபானத்தின்படியே திருவடி முதல் திருமுடி வரையில் ஒவ்வொரு அவயவத்தையும் அனுபவித்து, அளவிறந்த ஆனந்த ஸமுத்ரத்தில் மூழ்கின மனதுடையவராய் அந்த மனோவ்ருத்திக் கனுகுணமான, காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் மொய்த்துக் கண்பனி சோர வென்கிறபடி சிதிலித தேகேந்திரியராய் அவ்வெம்பெருமான் கல்யாண குணங்களையே வாயார வாழ்த்தி இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளு மச்சுவை பெரினும் யான்வேண்டேனென்கிறபடியே ஸேவித்து வைத்தகண் வாங்காதே நிற்க அங்கு எழுந்தருளி இருந்த வர்ச்சகர் ஸ்ரீ அழகிய சிங்கருக் கருளப்பாடிட்டு திருமாலை யருதி பரியட்டத்தோடு ஸ்ரீ சடகோபனை ப்ரஸாதித்து பகவத் ப்ரஸாதமான பழவர்க்கங்கள் திருத்துழாயையும் ப்ரஸாதிக்க ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸ்ரீ ஒப்பிலியப்பன் அர்ச்சகமுகமாக வருளின வரிசைகளை எல்லாம் ஸம்பூர்ண மாகப பெற்று பரிபூர்ண மனோரதனாய் அவ்வெம்பெருமானுடைய திருமேணி ஸௌந்தர்யத்திலும் கல்யாண குணங்களிலும் நிமக்னமான மனதுடையனாய் சிரிது காலமங்கெழுந்தருளி இருந்து திருவடி தொழுவதி

லாஸ்தாதிசயத்தினாலே சற்றேறக்குறைய ஒரு மாஸ காலம் தேவனார் விளாகம் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மாசாரியருடைய மாலோலாலயமென்று ப்ரஸித்தமான திருமாளிகையில் ஸ்ரீ சிங்கவேள்க் குன்றத் தெம்பெருமானோடும் அவ்வெம்பெருமானுடைய ஸகல பரிஜன பரிச்சதங்களோடும், அவர் சக்திக்கு அனுகுணமாக உபசரிக்கப்பெற்று ஒப்பிலியப்பன் எம்பெருமானை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு ஸுகமாக எழுந்தருளி இருந்தார்.

---

(2)

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸங்கல்ப மஹோற்சவம்

நாளது சித்திரபானு வரு ஆடி மீ 12வ திங்கட்கிழமை ஸ்ரீ அஹோபில மடம் 42-வது திவ்யா ஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத்வேதமார்கப்ரதிஷ்டாபநாசார்யாய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யாய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ராய வேதாந்தாசார்யாய ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரணஸார்வபௌமாய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவமானது—முன்பொரு காலத்தில், ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரவாஸியான ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் அனேக வருஷ காலங்களில் அங்கு கந்து எழுந்தருளி இருந்தபடியினாலே தக்ஷிணஹோபில க்ஷேத்ரமென்று ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி கல்யாண குண ஸம்பூர்ணரான ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்திர மகாதேசிகனால் ச்லாகித்து எழுதப்பட்ட பெரும்பாக்கமென்கிற ஓர் ஸ்ரீவைஷ்ணவ அக்ரகாரத்தில் நடை பெற்றது. அக்காலத்தில் ஸ்ரீ உ. வே. வித்வான் திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசாரியர், புத்தங்கோட்டம் ஸ்ரீ உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர் அம்மணம்பாகம் ஸ்ரீ உ. வே. வித்வான் ஸ்ரீகார்யம் நரஸிம்ஹாசாரியர் முதலான அனேக வித்வான்களும்—ஸ்ரீ உ. வே. எஸ். வரதாசாரியர் முதலான பெரிய உத்தியோகஸ்தர்களும் பல வக்கீல்களும் மிருசுதார்களும்—தூரதேசத்திலிருந்து சிரத்தையோடு வந்திருந்தார்கள். மற்றும் ஸமீபக்ராமங்களிலிருந்தும் அனேக புருஷர்களும் ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் வந்திருந்த ஸர்வ சிஷ்ய வர்க்கங்களையும் தமது ஸௌலப்யாபி முக்யத்தினாலும் ஸாபிப்ராயஸ்மிதங்களினாலும் ஸ்வாகத ஸூசகாவலோகனங்களினாலும் ப்ரிய பாஷணங்களினாலும் யதார்ஹம் ஆதரித்தருளினார். ஸங்கல்ப ஸம்பந்தமான ஸர்வ வைதிக காரியங்களும் ஸ்ரீ அழகிய சிங்கரால் சாஸ்திரப்படி உசித காலத்தில் விஸ்தாரமாக நடத்தப்பட்டு எல்லோருக்கும் தக்ஷிணை தாம்பூலங்கள் அளிக்கப்பட்ட பிறகு, ஷை பெரும்பாகம் அக்ரஹாரவாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களால் அங்கு வந்திருந்த ஸர்வ ஜனங்களுக்கும் ஸுகமான வாஸஸ்தானங்களும் ஆமின்சுவையவை யாரோடு கூடிய ததியாராதனமும் விஸ்தாரமாக நடத்தப்பட்டது. அன்று ராத்திரி ஸ்ரீ கண்ணபிரானுக்கு டோளோத்ஸவமும், வீணை-வேணு-முதலிய வாத்யங்களோடும் மதிமுக மடந்தையர்களுடைய இனியதான கான ரஸத்தோடும் சந்தன-புஷ்ப-பல-சர்க்கரை-தாம்பூலங்களோடும் நடத்தப்பட்டது. பிறகு கோயில் திருமலை-பெருமாள் கோவில் முதலிய திவ்ய தேசங்களிலிருந்து அவ்வெம்பெருமான்களால் நியமிக்கப்பட்ட திருமாலைகளும்—பரியட்டங்களும்—அபயஹஸ்தங்களும்—ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அருளப்பாடோடு ஆராதகர்களால் ஸமர்ப்பிக்கப்பட்டன. பிறகு வந்திருந்த வைஷ்ணவர்கள் நெடுங்காலம் பிரிந்திருந்த ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனையும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய-கல்யாண குணங்களையு மனுபவிப்பதிலாஸ்தையினால் சிலநாள் அங்கு ஸுகமாக வஸித்திருந்து ஊருக்குப் போகும் ஸமயத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் பலமந்த்ராக்ஷதைகளையும் நியமனத்தையும் பெற்றுப் போனார்கள், வந்திருந்த வித்வான்களுக்கும் கைங்கர்யம் செய்பவர்களுக்கும் வழக்கம்போல சால்வைகள்-வேஷ்டிகள் ஸம்மானமாக வளிக்கப்பட்டன. இப்படி ஸ்ரீ அழகிய சிங்கர் தமது சாதுர் மாஸ்ய ஸங்கல்பம் என்கிறவ்யாஜத்தினால் கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம் என்று அருளிச் செய்கிறபடியே இவ்வுலகில் மனிதனாய்ப் பிறந்தவர்கள் கண்படைத்த

பயனிதுதானென்று தீர்மானிக்கப்பட்ட பரமை காந்திகளையுபசரிப்பதுதான் ஆராதநாநாம்.....ததீயாராதநம் பரம் என்கிறபடியே உத்தமமான தர்மம் என்கிற சாஸ்திரார்த்தத்தை சிஷ்யர்களுக்கு தாமனுஷ்டித்துக் காட்டியருளினதோடு விப்ராஸ்ச யஸ்ய துஷ்டாஸ்ஸ்யு: ஸத்ய: க்ஷீயதே பாபராஶய: | பதாநாம் மஹாபாதகை: ஸ்ம்ருத்வா ததீயம் பதம் பரம் ॥ என்கிறபடியே அங்கு வந்திருந்த ஸர்வ ஜனங்களும் உளன்வாட வுண்ணுதுயிர் காவலிட்டுடலிற் பிரியாப் புலனைந்து நொந்து தான் வாடவாடத் தவம் செய்து போக்கவேண்டிய பாபங்களை எல்லாம் தூராத மனக்காதல் தொண்டரான-ப்ராம்மணர்களுடைய கூட்டத்தைக் கணணுரக் கண்டு களிப்பதான சிரமமில்லாத காரியத்தினுலே நாசம் செய்து அக்கூட்டத்தைக் கண்டு தெண்டனிடுவதால் ஸர்வ மங்களத்தையும் அக்கூட்டத்தில் கலந்திருக்க யோக்யர்கள் கலந்திருப்பதால் நித்யஸுகமான மோக்ஷத்தையும் அடைந்து வாழ்ந்திருக்கும்படி செய்த மஹோபகாரம் ஆஸ்திகர்களால் மிகவும் கொண்டாடக்கூடியதென்பது நிச்சயம்.

---

(3)

தில்லஸ்தாநம் ஸ்வாமிகள் ஸ்ரீஸங்கல்ப மஹோத்ஸவம்

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யேத்யாதி ப்ரகாரேண எழுந்தருளியிருக்கும் தில்லஸ்தானம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன், காஞ்சீபுர மென்று வழங்கப்படும் பெருமாள் கோவில் திவ்ய தேசத்துக்கு மேற்கேயுள்ள அவளூர் அக்ரஹாரத்தில், அவ்வக்ரஹாரிகாளுடைய ப்ரார்த்தனையின் பேரில் எழுந்தருளி, நேற்று (27—7—42) ஸ்ரீ சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் (8-வது) கண்டருளினர். காலையில் ஸ்ரீஸ்வாமி, தமது கோதிலாத் தரண் மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரளுடன், தமது நித்யாராதநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு சத்ரசாமராதி வாத்ய கோஷங்களுடனும் வேதபாராயணத்துடனும், ஸர்ப்பநதி யென்று ப்ரஸித்தி பெற்ற தாமல் வாய்க்காலுக்கு எழுந்தருளி ம்ருத்ஸங்க்ரஹணுதிகளைச் செய்து கொண்டு எழுந்தருளினர். இவ்வுத்ஸவ வைபவத்தை ஸேவித்து அநுபவிப்பதற்கும், ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரஸாதத்தைப் பெறுவதற்கும், காவேரிப்பாக்கம், சிறுநாவல்பட்டு, தாமல், நாட்டேரி, பிரமதேசம் முதலிய பல அக்ரஹாரங்களிலிருந்து பரிகணிதர்களான பல பண்டிதர்கள் எழுந்தருளியிருந்தனர். சுமார் 150 திருநாமங்களுக்கு விசேஷ ததியாராதநம் நடைபெற்றது.

பிறகு, பிரமதேசம் பண்டிதர் ஸ்ரீ உப. தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ ஸ்வாமியின் சிஷ்யரான பண்டிதர் தாமல் கொந்தமூர். ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ ஸ்வாமியின் வைபவத்தைப் பற்றிச் சுமார் 2-மணி காலம் யாவரும் வியக்கும்படி பரக்க உபந்யஸித்தனர். இத்தகைய சிறப்புக்களுடன் மாலை 3-மணிக்கு விழா வெகு விமர்சையாக நடந்தேறியது. இவ்விழா பலவித வைபவங்களோடு சிறப்புடன் நடைபெற்றதற்கு, ஸ்ரீ ஸ்வாமியின் கல்யாண குணங்களில் அக்ரஹாரிகாளுடைய ஈடுபாடும் சிரத்தாதிக்யமும் ஒற்றுப்பாருமே காரணமாகுமென்று கூறுவது எவ்விதத்திலும் மிகையாகாது.

—புதுச்சேரி துரைஸாமி தாஸன் (அவளூர்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீபாகவதம் தஶம ஸ்கந்தம் பூர்வார்த்தம் இருபத்தொன்பதாவது அத்யாயத்தில், கோபஸ்த்ரீகள் ஸ்ரீக்ருஷ்ணனுடைய அநவரத த்யாநத்தால் க்ஷீண பாபர்களாய் பரமாத்ம ஸாயுஜ்யத்தை அடைந்தார்களென்று ஸ்ரீஶுகர் சொன்னபொழுது, பரீக்ஷித் மஹா ராஜனுக்கு ஒரு ஶங்கை ஜநித்து அவர், "ஹே மஹர்ஷியே! கோபஸ்த்ரீகள் ஸ்ரீக்ருஷ்ணனை த்யாநம் செய்யும்பொழுதெல்லாம் தமது காமத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய புருஷனாக மாத்ரம் த்யாநம் செய்தார்களே அல்லது அவன் பரமாத்மாவென்று த்யாநம் செய்யவில்லையே; அவர்களுக்கு எவ்விதம் மோக்ஷம் கிடைத்தது?

(த்வேஷமும் மோக்ஷஸாதநமாகுமோ?)

"க்ருஷ்ணம் விது: பரம் காந்தம் ந து ப்ரஹ்மதயா முநே ।
குணப்ரவாஹோபரமஸ்தாஸாம் குணதியாம் கதம் ॥"

என்று ஒரு ப்ரஶ்நம் செய்தார். அதற்கு ஸ்ரீஶுகர், "ஹே பரீக்ஷித்தே! ஸ்ரீக்ருஷ்ணன்மீது உக்ரமான த்வேஷத்தைச் செய்து வந்த ஶிஶுபாலனும் ஸித்தியை அடைந்தானேயானால், எப்பொழுதும் அளவற்ற ப்ரீதியுடன் ஸ்ரீக்ருஷ்ணனை த்யாநம் செய்துவந்த கோபஸ்த்ரீகள் மோக்ஷம் அடைந்தார்கள் என்பதைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ?

"உக்தம் புரஸ்தாதேதத்தே சைத்ய: ஸித்திம் யதா கத: ।
த்விஷந்நபி ஹ்ருஷீகேஶம் கிமுதாதோக்ஷஜப்ரியா: ॥"

என்று ஸமாதாநம் கூறிவிட்டு அதை முடிக்குமிடத்தில் "பகவானிடத்தில் எவர்கள் எப்பொழுதும் மநஸ்ஸைச் செலுத்தி அவன் நினைவுடனேயே இருக்கிறார்களோ, அவர்கள் அந்த த்யாநத்தின்

மஹிமையினாலேயே பகவந் மயமாக ஆகிவிடுவார்கள். அநவரத த்யாநமானது காமத்தாலோ, கோபத்தாலோ, த்வேஷத்தாலோ, பயத்தாலோ எதனல் இருந்தாலும் அது மோக்ஷத்திற்குக் காரணமே ஆகும்.

“𑌕𑌾𑌮𑌂 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌭𑌯𑌂 𑌸𑍍𑌨𑍇𑌹𑌮𑍈𑌕𑍍𑌯𑌂 𑌸𑍌𑌹𑍃𑌦𑌮𑍇𑌵 𑌚 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌹𑌰𑍌 𑌵𑌿𑌦𑌧𑌤𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑌨𑍍𑌮𑌯𑌤𑌾𑌂 𑌹𑌿 𑌤𑍇 ॥”

என்று தாம் முன் சொன்ன ஸமாதாநத்தையே த்ருடீகரித்திருக்கிறார். ஶிஶுபால வதம் சொல்லப்பட்டிருக்குமிடத்திலும் இந்த அர்த்தமே வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

“𑌜𑌨𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌿𑌤𑌵𑍈𑌰𑌸𑌂𑌰𑌬𑍍𑌧𑌯𑌾 𑌧𑌿𑌯𑌾 ।
𑌧𑍍𑌯𑌾𑌯𑌂𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌹𑌿 𑌭𑌵𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥”

[மூன்று ஜந்மங்களாக ஶிஶுபாலன் பகவானிடத்தில் உத்கடமான த்வேஷத்தைச் செய்து வந்தான். அந்த த்வேஷம் பகவானுடைய நினைவையே அவன் மநஸ்ஸில் ஸ்திரப்படுத்திற்று. அந்த நினைவின் மஹிமையினாலேயே ஶிஶுபாலன் பகவத் ஸாயுஜ்யத்தை அடைந்தான். த்யாநமன்றோ அடுத்து வரும் ஜந்மத்திற்குக் காரணம்?] இவைகளைப் பார்க்கும்பொழுது ‘இடைவிடாமல் பகவானை நினைத்து வருவதே மோக்ஷத்திற்குக் காரணம். அந்த நினைவு ப்ரீதியினால் தான் ஏற்பட வேண்டுமென்று நியமமொன்றுமில்லை’ என்பதே ஸ்ரீ ஶுகருடைய மதமென்று தோன்றுகிறது.

பகவத் கீதையிலோ ‘பக்தியே மோக்ஷத்திற்குக் காரணம். ஜபம், தபஸ் முதலானவை பக்தி விரஹிதமாக இருந்தால் அவை பகவானை அடைவதற்குக் காரணமாக மாட்டா’

“𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 ।
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥”

என்று உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. ‘பக்தி’ என்பது ப்ரீதியுடன் செய்யப்படும் த்யாநமே தவிர்த்து கேவலம் த்யாநமன்று என்று பெரியோர்கள் விவரித்திருக்கிறார்கள். இவ்வாறு சொல்லிவிட்டு, அதனுடன் நிற்காமல், ‘என்னை எவர்கள் த்வேஷிக்கிறார்களோ, அவர்களை நான் ஸம்ஸாரத்திலேயே அழுத்துகிறேன். அவர்கள் நராதமர்கள், அஶுபர்கள், க்ரூரர்கள்.

“𑌤𑌾𑌨𑌹𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑍍𑌯𑌜𑌸𑍍𑌰𑌮𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 ॥”

என்றும் ஸ்ரீபகவானே அநுக்ரஹித்திருக்கிறார். இவைகளைப் பார்க்கும்பொழுது, ப்ரீதி இன்றிக்கே செய்யப்படும் த்யானம் மோக்ஷத்திற்கு ஸாதநமாக மாட்டாதென்றும், பகவானை த்வேஷிப்பவர்களுக்கு அதம கதியே நேர்கின்றதென்றும் வ்யக்தமாகத் தெரிகின்றது. இந்த இரண்டு மதங்களும் இப்படி பரஸ்பரம் விருத்தங்களாக இருக்கின்றனவே. இந்த விரோதத்திற்குப் பரிஹாரமுண்டோ?

இதைப் பற்றி 'வேதாந்த கேஸரி' என்னும் ஒரு பாஷாந்தர பத்ரிகையில் ஒரு வித்வான் தீர்க்கமாக விசாரித்து, 'த்வேஷம் பயம் காமம் முதலிய மநோ பாவங்களெல்லாம் பக்தியின் விகாரங்களே யாகையால், பக்தியானது எந்தப் பலத்தைக் கொடுக்குமோ அந்தப் பலத்தை இவைகளும் கொடுக்குமென்றும், இந்த ரஹஸ்யத்தை நமது மஹர்ஷிகள் பூர்வமே நன்கு அறிந்து நமது ஶாஸ்த்ரங்களில் வெளியிட்டிருக்கிறார்களென்றும், பாஶ்சாத்ய வித்வான்கள் இப்பொழுதுதான் இதைப் பற்றி விசாரித்து க்ரந்தங்களை எழுதி வருகிறார்களென்றும் ஒரு நிர்ணயத்தைச் செய்திருக்கிறார். இந்த நிர்ணயம் ப்ரபலமான ப்ரமாணங்களுக்கு விருத்தமாக இருக்கிறபடியால் நமது அங்கீகாரத்திற்கு அநர்ஹம். இதைப் பற்றி நமது ஸித்தாந்தம் என்ன சொல்லுகின்றது என்பதை மாத்ரம் இவ்விடத்தில் ஸங்க்ரஹமாக விசாரிப்போம்.

நிரதிஶய ப்ரீதி ரூபமான த்ருவாநுஸ்ம்ருதியே அபவர்க்கத்திற்கு உபாயம் என்பதுதான் நமது ஸித்தாந்தம். 'ஸ்ம்ருதி' என்பதற்கு 'நினைவு' என்பது பொருள். அது த்ருவமாக இருப்பதாவது, தைல தாரைபோல அவிச்சிந்நமாக இருப்பதே. அதாவது, வேறு விதமான நினைவொன்றும் நடுவில் வராமல் இந்த நினைவே தொடர்ந்து நிற்பதுதான். இதைப் பெரியோர்கள் 'விஜாதீயப்ரத்யயாந்தராவ்யவஹிதம் ஸந்ததிக்ஷ' என்று ஸம்ஸ்க்ருத பாஷையிற் சொல்வார்கள். இப்படிப்பட்ட த்ருவாநுஸ்ம்ருதியானது பாவநாப்ரகர்ஷத்தால் ப்ரத்யக்ஷ ஸமாநமான ஆகாரத்தை அடைந்து அத்யர்த்த ப்ரீதிபூர்வகமாகவும் இருத்தல் வேண்டுமென்று நமது ஶாஸ்த்ரங்களில் சொல்லுகின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில், 'பகவானால் எவர்கள் மோக்ஷார்ஹர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்?' என்பதை விவரித்து வரும்பொழுது,

"யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:"

[எவனைப் பகவான் வரிக்கிறானோ அவனாலேயே பகவான் அடையப்படுகிறான்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. பகவான் அவ்யவஸ்திதமாக ஒருவனையும் வரிக்கமாட்டானாகையால், பகவானிடத்தில் அளவற்ற ப்ரீதி செய்கிறவனே இவ்விடத்தில் "யம்" என்னும் ஶப்தத்தால் குறிக்கப்படுகிறான் என்று வ்யாக்யாதாக்

கள் நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள். லோகத்திலும் இந்த ந்யாயத்தைப் பார்க்கலாம். ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் ப்ரஜைகளெல்லாரும் அநுரக்தர்களாக இருந்ததற்கு, அவன் அந்த ப்ரஜைகளை அநுரஞ்ஜித்து வந்ததையே முக்ய ஹேதுவாக ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி,

"𑌅𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌯𑌨𑍁𑌰𑌜𑍍𑌯𑌤𑍇"

என்னும் வாக்யத்தால் விவரித்திருக்கிறார். இதனால், உபாஸிக்கிற பக்தன் உபாஸிக்கப்படுகிற பகவான் இவர்களுக்குப் பரஸ்பர விஷயமான ப்ரீதி இருத்தல் வேண்டுமென்று தர்ஶிப்பிக்கப்படுகிறது. இந்த வரண ப்ரகாரமே ஸ்ரீபகவத் கீதையிலும்,

"𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥"

[எவர்கள் பகவானுடன் நிரந்தரமான சேர்க்கையை இச்சித்துக் கொண்டு அவனைப் பஜிக்கிறார்களோ, அவர்களுக்கு நான் ப்ரீதி பூர்வகமாக மோக்ஷஸாதநமான புத்தி யோகத்தைக் கொடுக்கிறேன்] என்று பகவானே விளக்கி இருக்கிறான். ஶ்ருதி ஸ்ம்ருதி இவைகளெல்லாம் இவ்வாறு அநுக்ரஹித்திருக்கிறபடியால், ப்ரீதி ரூபமான த்ருவாநுஸ்ம்ருதியே அபவர்க்கத்திற்கு உபாயமென்று நமது ஆசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

இது நமது ஸித்தாந்தமானால், ஸ்ரீ ஶுகருடைய வாக்யத்திற்கு கதி என்ன? என்றால், நமது ஸித்தாந்தத்திற்கும் ஸ்ரீஶுகருடைய வாக்யத்திற்கும் பரிஹரிக்கப்படத்தகாத விரோதமொன்றுமில்லை என்பதே ஸமாதாநம். பயந்த கம்ஸனும், த்வேஷித்த ஶிஶுபாலனும் மோக்ஷத்தை அடைந்ததற்கு அவர்களுடைய பயமும் த்வேஷமும் காரணமல்ல. அவர்களையும் அவர்களைப் போன்ற மற்றவர்களையும் விலக்ஷணாதிகாரிகள் என்றே சொல்ல வேண்டும். அவர்களுக்குப் பூர்வ ஜந்மத்திலேயே பக்தி யோகம் நிஷ்பந்நமாகி இருந்திருக்கவேண்டும். ஒரு கர்ம விஶேஷத்தால் அந்த யோகத்தின் பலம் கொஞ்சகாலம் தடைப்பட்டு அந்தக் கர்ம விஶேஷத்தின் பலமாக இந்த ஜந்மத்தில் அவர்கள் பகவானிடத்தில் பக்தியைச் செய்யாமல் வேறுவிதமான த்வேஷம் முதலிய மநோபாவங்களைச் செய்திருக்கலாம். அந்தக் கர்மம் கழிந்தவுடன் பூர்வம் நிஷ்பந்நமான பக்தி அவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுத்திருக்கலாம். இவ்வாறு சொல்வது உபபந்நமாக மாட்டாதோ? அநேக பாகவதோத்தமர்களுக்கு அம்மாதிரி ப்ரதிபந்தகம் நேர்ந்திருப்பது புராண ப்ரஸித்தம். கர்மத்தின் வைசித்ரியை யார் அறிவார்? 'த்வேஷிகளை ஶிக்ஷிப்பேன்' (க்ஷிபாமி) என்று பகவான் செய்த ப்ரதிஜ்ஞையும் இவர்கள் விஷயத்தில் நிறைவேறிற்றென்றே சொல்லக்கூடும். த்வேஷித்திருந்த கால

மெல்லாம், பகவானிடத்தில் ப்ரீதி செய்வதால் உண்டாகும் ஆநந்தாநுபவத்தை இவர்கள் இழந்திருக்கும்படி ஸம்பவித்ததே இவர்களுக்குப் பெரிய ஶிக்ஷை. பக்தி ஸுகத்தை அநுபவித்தவர்களுக்கு அதன் இழவைக் காட்டிலும் அஸஹ்யமான துக்கமும் உண்டோ?

'கம்ஸாதிகளுக்கு மோக்ஷம் கிடைத்ததற்கு இது ஸமாதாநமாகலாம். "யூாயஂஸூநய தாஸீதஃ" [ஒருவன் எதை எப்பொழுதும் த்யாநித்திருக்கிறானோ அவன் அதன் தன்மையை அடைகிறான்] என்னும் ந்யாயத்திற்கு இது எப்படி ஸமாதாநமாகும்?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இரண்டு ஶாஸ்த்ரங்கள் பரஸ்பரம் விரோதித்தால் அவைகளுள் எது அநந்யதாஸித்தமோ அது ப்ரபலமாகையால், மற்றொன்றைக் கொஞ்சம் ஸங்கோசித்து விஷய விஶாகம் செய்வதுதானே ந்யாய்யம்? இவ்விடத்தில் பக்தி ஶாஸ்த்ரம் அநந்யதாஸித்தம். ஆகையால் அது ப்ரபலம். அதிற் சொல்லப்படும் பக்தி மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்தாக ஸாதநமென்றும், மற்றொன்று பரம்பரையாக ஸாதநமென்றும் விஷய விஶாகம் செய்வதே உசிதமாகும். அதாவது 'பக்தி செய்பவர்கள் ஸாக்ஷாத்தாகவே மோக்ஷம் அடைகிறார்கள்; மற்றவர்கள் த்வேஷம் முதலிய ஶாவத்தைச் செய்தாலும், அவர்களால் த்யாநிக்கப்படும் வஸ்து ஶுபமான வஸ்துவானதால், அந்த வஸ்து தனது ஸ்வபாவத்தால் தன்னை த்யாநிப்பவர்களைச் சரியான பக்தி மார்க்கத்தில் மூட்டி அது வழியாக அவர்களுக்கும் நல்ல கதியைக் கொடுக்கின்றது' என்பதே. ஸ்ரீ ஶுகருடைய அபிப்ராயமும் இதுதான். அவர் பகவானிடத்தில் நிரதிஶய ப்ரீதி செய்தவரே. "விஷஹவி ஹரஷீகெஶஂ கிஂ தாயொக்ஷஜ விரயாஃ" என்று கோப ஸ்த்ரீ விஷயமாக அவர் பேசியிருக்கும் கைமுதிக ந்யாயமும் அவருக்கு ப்ரீதி பூர்வமாகச் செய்யப்படும் த்யாநத்திலேயே நோக்கு என்பதை நன்றாக விளக்குகின்றது. இப்படி விஷய விஶாகம் செய்யாவிட்டால் ப்ரபலங்களான ஶாஸ்த்ரங்களுக்குக் கோபம் வருமன்றோ?

நமது ஆசார்யர்களெல்லாரும் பக்தி ஒன்றே மோக்ஷ ஸாதநமாகுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். "கூயபூாக வீூ்ரைதவ காரிதஃ" [நமது கர்மங்களெல்லாவற்றையும் நாம் ப்ரீதி பூர்வமாகவே செய்தல் வேண்டும்] என்பது ஸ்ரீ யாமுநாசார்யருடைய திவ்ய ஸூக்தி. "ஶெஶஷீ ஹக்திரூவா" [பக்தி ரூபாபந்நமான ஜ்ஞாநமே வேண்டும்] என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ரார்த்தநை. ஆகையால் பக்தி ஒன்றே மோக்ஷ ஸாதநம் என்பது ஸித்தம்.

"நாநவ்ஃ வநா கூயநாய விஜ்வெத"

* * * *

பகவானுடைய விசித்ர சேஷ்டிதங்கள்

இந்த ஜகத்தில் அத்யாஶ்சர்யகரமாகவும் ஒருவருடைய புத்திக்கும் எட்டாததாகவும் சிற்சில ஸமயங்களில் சிற்சில ஸம்பவங்கள் ஏற்படுகின்றன. அவைகளின் விஷயத்தில் அதிமாத்ரம் அல்பஜ்ஞர்களாயிருக்கும் நாம் வாயைத் திறவாமல் 'சும்' என்றிருப்பதே உசிதமன்றோ? ஸர்வஜ்ஞனாகவும், ஸர்வஶக்தியாகவும் இருக்கும் பகவானுடைய முன்னிலையிலன்றோ நாம் நிற்கின்றோம்? அவன் ஜடமான வஸ்து அல்லன்; நம்முடைய ஸுகதுக்கங்களை அறியாத கேவல நியதியுமல்லன்; நிர்க்ருணனான ராக்ஷஸ ப்ரக்ருதியுமல்லன். ஸகல ஹேய ப்ரத்யநீகனும், ஸகல கல்யாண குண பரிபூர்ணனுமான மஹாப்ரபுவே அவன். இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலிய வ்யாபாரங்களெல்லாவற்றுக்கும் அவனே நியந்தா; இதில் நடக்கும் ஸம்பவங்களுள் ஒன்றுகூட அவனுக்கு அவிதிதமன்று. இப்படிப்பட்ட மஹாப்ரபுவை நாதனாக நாம் பெற்றிருப்பது வாசாமகோசரமான ஒரு பாக்ய விஶேஷமே. இப்படிப்பட்ட அவனுடைய அபாரமான ஜ்ஞாந ஶக்திகளையும், நம்முடைய பரமபாரதந்த்ர்யத்தையும் அறிந்திருக்கும் நாம், சிற்சில காலங்களில் அவனுடைய சேஷ்டிதங்களின் கருத்தை அறியாமலே 'ஏன் இம்மாதிரி வ்யாபாரங்களை அவன் செய்கிறான்?, என்று நினைக்கின்றோம்.

இப்பொழுது ஜகத்தில் ஸம்பவித்திருக்கும் க்ஷோபமும், அதனால் நேரும் ப்ரஜாநாஶம் த்ரவ்ய நாஶம் முதலியவைகளும் இம்மாதிரியான வ்யாபாரங்களாகவே நமக்குத் தோன்றுகின்றன. 'இவ்வளவு ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப்பானேன்? ஸ்ருஷ்டியின் ப்ரயோஜநத்தைப் பெறும் முன் அவர்களை நஶிப்பிப்பானேன்? அந்நத்திற்கு அபேக்ஷிதமான ஸாமக்ரிகளைச் சேர்த்து அந்த அந்நம் பாதி பாகமாகிக் கொண்டிருக்கையில் பாக பாண்டத்தைத் தூக்கிக் கீழே எறிந்து அதை உடைக்கும் ஸாமாந்ய மனுஷ்யனுக்கும் இவனுக்கும் வாசி ஒன்றும் தெரியவில்லையே!' என்றன்றோ நாம் நினைக்கும்படியாக இருக்கின்றது? ஆனால் நமக்கு என்ன தெரியும்? இப்பொழுது அவை இம்மாதிரி அஸங்கதமாகத் தோன்றினாலும், கடைசியில் அவையெல்லாம் அதிமாத்ரம் உபபந்நங்களாகவும் நமக்கு ஹிததமங்களாகவும் பரிணமிக்கும் என்பது அவனிடத்தில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை த்ருடம் செய்து கொண்டால் நன்கு விளங்கும். அவனே ப்ரமாணம்.

अन्धन्तमः प्रविशन्ति येऽविद्यामुपासते ।
ततो भूय इव ते तमो य उ विद्यायां रताः ॥ ९ ॥

स [तं] पर्यगात् - அவன் அவனை அடைவான். இந்த வாக்யம் மற்றொரு உபநிஷத்தில் காணப்படும் "**ब्रह्मविदाप्नोति परम्**" என்பதற்கு ஸமாநார்த்தகம். '**सः**' என்பது '**ब्रह्मवित्**' [ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவன்] என்னும் அர்த்தத்தையும், '**तम्**' என்பது '**परम्**' [பரமாத்மாவை] என்னும் அர்த்தத்தையும், '**पर्यगात्**' என்பது **प्राप्नोति**' [அடைகின்றான்] என்னும் அர்த்தத்தையும் குறிக்கின்றன. '**पर्यगात्**' என்னும் பதம் இறந்தகால வினையாக இருந்தாலும் 'அடைவான்' என்னும் வருங்கால தாத்பர்யத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது '**कविः**' என்பது முதலிய ப்ரதமாந்த ஶப்தங்களெல்லாம் அப்படிப்பட்ட ப்ரஹ்மவித்தே இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகிறான் என்பதையும், '**शुक्रम्**' என்பது முதலிய த்விதீயாந்த சப்தங்களெல்லாம் அப்படிப்பட்ட ஸமஸ்தஹேய ப்ரத்யநீகனை பரமாத்மாவே விவக்ஷிதனென்பதையும் விளக்குகின்றன.

---

9. இந்த உபநிஷத்தானது, முதல் மந்த்ரத்தால் ஸகல ப்ரபஞ்சமும் பரம புருஷனுக்கு அதீநமான ஸ்வரூபம் முதலியவற்றை உடைத்தாயிருக்கின்றது என்னும் தத்வத்ரய ஸ்வரூபத்தையும், இரண்டாவது மந்த்ரத்தால் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாக இருக்கும் கர்ம யோகத்தின் அநுஷ்டாந ஸ்வரூபத்தையும், மூன்றாவது மந்த்ரத்தால் ப்ரஹ்ம வித்யையில் சீக்ரம் ப்ரவ்ருத்தி உண்டாவதற்காக ஜ்ஞாநமற்றவர்களுடைய அநர்த்தத்தையும் விவரித்தது. அதற்குப் பிறகு நான்காவது ஐந்தாவது மந்த்ரங்களால் பரப்ரஹ்மத்தின் ஶக்தியானது அநந்தமென்றும் விசித்ரமென்றும் சொல்லி, ஆறாவது ஏழாவது மந்த்ரங்களால் இவ்வாறு 'ஸர்வ ஜகத்தும் ப்ரஹ்மத்தை அந்தராத்மாவாக உடைத்தாயிருக்கின்றது' என்று அநுஸந்தாநம் செய்துகொண்டு ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவர்களுக்கு என்ன ப்ரயோஜநங்கள் கிடைக்கின்றனவென்பதை விளக்கிற்று. பிறகு, எட்டாவது மந்த்ரத்தால் எவன் தத்வஸ்திதியை இப்படிப்பட்டது என்று அறிந்திருக்கிறானோ அவனை விஶேஷித்துப் பேசி, அது வழியாக உபாஸநமாகிற த்யாநயோகத்தை உபதேஶிக்க ஆரம்பித்தது. இப்படி சேதநாசேதந ரூபமான இரண்டு அவர தத்வங்களின் ஸ்வரூபத்தையும் கர்மயோக ஜ்ஞாநயோக ரூபமான இரண்டு வ்யவஹித உபாயங்களையும் ப்ரதிபாதித்துவிட்டு, ஸாக்ஷாத் ஸாதநமாகிற பக்தி யோகத்தையும் ப்ரஸ்தாவித்தது. ஒன்பது பத்து பதினொன்று இந்த மந்த்ரங்களால் பக்தி யோகத்தை ப்ரதிபாதிக்க ஆரம்பித்து முதலில்

அதற்கு அங்கமாயிருக்கும் கர்மாநுஷ்டாநத்தை மாத்ரம் மோக்ஷ ஸாதநமாக அங்கீகரிப்பதும் தவறுதல்; அந்த அங்கங்களைக் கைவிட்டு உபாஸநத்தை மாத்ரம் அவலம்பிப்பதும் தவறுதல்' என்பதைச் சொல்லுகின்றது. வர்ணாஸ்ரம தர்மாநுஷ்டாந ரூபமாகிற கர்மங்களைச் சரிவரச் செய்து அதனால் அநுக்ரஹிக்கப்படும் வித்யையை எவன் அநுஷ்டிக்கிறானோ அவனே பரம நிஸ்ரேயஸத்தை அடைகிறான் என்பதுதான் இவ்விடத்தில் உபதேசிக்கப்படும் தத்வம்.

[பதவுரை] **ये** - எவர்கள், **अविद्याम्** - கர்மங்களை மாத்ரம், **उपासते** - அநுஷ்டிக்கிறார்களோ, **ते** - அவர்கள், **अन्धन्तमः** - பெருத்த இருளை, அதாவது அஜ்ஞாநத்தை, **प्रविशन्ति** - அடைகிறார்கள். **ये** எவர்கள், **विद्यायां उ** - கேவல வித்யையில் மாத்ரம் [அதாவது - தங்கள் தங்கள் அதிகாரத்திற்கு உசிதமான கர்மங்களை விட்டுவிட்டுக் கேவலம் வித்யையில் மாத்ரம்], **रताः** - ஆஸக்தி உள்ளவர்களாக இருக்கிறார்களோ, **ततः** - அதைக் காட்டிலும் [அதாவது - கீழ்ச் சொல்லப்பட்டுள்ள இருளைக் காட்டிலும்], **भूयः** - அதிகமான, **तमः** - இருளை, [**प्रविशन्ति** - அடைகிறார்கள்]. **इव** - என்னும் ஸப்தம் இருளின் அளவற்றதன்மையை [அதாவது - நம்மால் க்ரஹிக்கக்கூடாத தன்மையை] த்யோதிப்பிக்கின்றது.

அநேக ஜநங்கள், 'போகம் ஐஸ்வர்யம் இவை முதலிய ஐஹிக ஸுகங்களே பரம ஸாத்யங்கள்' என்னும் எண்ணத்துடன், பரம புருஷார்த்தத்தில் விஸ்வாஸ மற்றவர்களாய், அந்த ஸுகங்களை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய யாகம் முதலிய கர்மங்களையே செய்து கொண்டு ஆயுள் நாள்களைக் கழிக்கிறார்கள். மற்றும் சிலர், 'கர்மங்களெல்லாம் நஸ்வர பலத்தையே ஸாதித்துக் கொடுக்கக்கூடியவையாதலால் அவைகளால் ப்ரயோஜநமொன்றுமில்லை' என்று கர்மங்களெல்லாவற்றையும் அடியோடு பரித்யஜித்து கேவலம் உபாஸநத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். இந்த இருவர்களுக்கும் நல்ல கதி கிடைக்க மாட்டாது. ஏனென்றால், பகவான் பக்தியிராமல் அடையப்பட மாட்டான்; கர்மங்களிராமல் பக்தி நிறைவேற மாட்டாது. ஆகையால் கர்மங்களைச் செய்து ரஜஸ் தமஸ்ஸுக்களை விலக்கிக்கொண்டு எவன் பக்தியில் ப்ரவர்த்திக்கிறானோ, எவன் ஸத்வ குணத்தை வ்ருத்தி செய்துகொண்டு தனது கர்மங்களை யாவதாயுஷம் செய்துகொண்டே உபாஸநத்தில் ப்ரவர்த்திக்கிறானோ, அவனே பரம நிஸ்ரேயஸத்தை அடையக் கூடியவன் என்பது ஸித்தம்.

'**विद्या**' - ப்ரஹ்ம வித்யை; அதாவது பக்தி. ஆகையால் '**अविद्या**' என்பது அந்த வித்யையைக் காட்டிலும் வேறு பட்டதான கர்மத்தைக் குறிக்கும். '**अ**' என்பதற்கு இந்த அர்த்தமும் உண்டு.

अन्यदेवाहुर्विद्यया अन्यदाहुरविद्यया ।
इति शुश्रुम धीराणां ये नस्तद् व्याचचक्षिरे ॥ १० ॥

विद्याञ्चाविद्याञ्च यस्तद्वेदोभयं सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते ॥ ११ ॥

---

10. இவ்வாறு வித்யை அவித்யை இவை இரண்டும் கூடாவாஞல், வேறு எது தான் மோக்ஷ ஸாதநமாகக்கூடும்? என்ருல், அதை விளக்குகின்றது இந்த மந்த்ரம்.

[பதவுரை] - **विद्यया** - வித்யையைக் காட்டிலும், '**अन्यदेव**' வேறுபட்டதா யிருப்பதையே, [**मोक्षसाधनम्**- மோக்ஷத்திற்கு உபாய மென்று], **आहुः** - [உபநிஷத்துக்கள்] சொல்லுகின்றன. **अविद्यया** - கர்மத்தைக் காட்டிலும், **अन्यदेव** - வேறு பட்டதையே, **आहुः** - [மோக்ஷ ஸாதநமென்று உபநிஷத்துக்கள்] செல்லுகின்றன. **ये** - எந்தப் பூர்வா சார்யர்கள், **नः** - எங்களுக்கு, **तत्** - அதை [அதாவது - அந்த மோக்ஷ ஸாதநத்தை], **व्याचचक्षिरे** - விவேசித்து உபதேஶித்தார்களோ, [**तेषां**] **धीराणाम्** - அந்தப் புத்திமான்களிட மிருந்து, **इति** - இவ்வாருக, **शुश्रुम**- கேட்டிருக்கிரும்.

இந்த மந்த்ரத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள '**विद्यया**' '**अविद्यया**' என்னும் மூன்ரும் வேற்றுமையில் இருக்கும் பதங்கள் ஐந்தாம் வேற்றுமையின் அர்த்தத்தை உடையவை என்றும், **धीराणाम्** - என்னும் ஆரும் வேற்றுமையை உடைய பதம் ஐந்தாம் வேற்றுமையின் அர்த்தத்தை உடையதென்றும் அறிந்து கொள்ளவேண்டும். இம்மாதிரியான வேறுபாடுகள் வேத வாக்யங்களில் உண்டு.

---

11. கீழில் '**अन्यत्**' '**अन्यत्**' என்று ஸாமாந்யமாகச் சொல்லப்பட்ட மோக்ஷ ஸாதநத்தை இந்த மந்த்ரம் விவரிக்கின்றது.

[ப - ரை]. **यः** - எவன் [உள்ளபடி வித்யோபதேஶத்தைப் பெற்ற எவன்], **विद्याम्** - [ப்ரஹ்மோபாஸந ரூபமாகிற] வித்யையையும், **अविद्याम्** - [அந்த வித்யைக் காட்டிலும் வேறுபட்டதாயும் அதற்கு அங்கமாயும் இருக்கும்] கர்மத்தையும், **तदुभयम्** - இந்த இரண்டையும், **सह**-ஒன்ருெடு ஒன்று கூடியதாக [ஒன்று அங்கமாகவும் மற்ருென்று அங்கியாகவும் இரண்டும் அங்காங்கி ஸம்பந்தம் பெற்றவை யென்று], **वेद** - அறிகின்ருனே, அறிந்து அநுஷ்டிக்கிருனே, [**सः** - அவன்], **अविद्यया**- கர்மத்திஞல் [அதாவது தம்தம் வர்ணுஶ்ரமங்களுக்கு உசிதங்களான கர்மங்களை அநுஷ்டிப்பதஞல்], **मृत्युम्** - ம்ருத்யுவை [வித்யையின் உத்பத்திக்கு இடையூருக இருக்கும் புண்ய பாபரூபங்களான ஜந்மாந்தர கர்மங்

अन्धन्तमः प्रविशन्ति येऽसंभूतिमुपासते ।
ततो भूय इव ते तमो य उ संभूत्यां रताः ॥ १२ ॥

களை] तीर्त्वा - கடந்து, विद्यया - [பரமாத்மோபாஸந ரூபமான] வித்யையினால், अमृतम् - மோக்ஷத்தை, अश्नुते - அடைகிறான்.

இவ்விடத்தில் मृत्युं तीर्त्वा - என்பதால் உபாஸநத்தின் விரோதிகளைக் கடப்பதும், अमृतमश्नुते - என்பதால் ப்ரஹ்மத்தை அடைவதும் சொல்லப்படுகின்றன.

ஒருவன் ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தைப் பூர்ணமாக அடைந்திருக்கலாம். அது மாத்ரம் உபாஸநத்தில் ப்ரவ்ருத்தியை உண்டுபண்ண மாட்டாது. பலாபிஸந்தி இன்றிக்கே கர்மாநுஷ்டாநத்தையும் செய்தால் மாத்ரம் உபாஸநம் ஸம்பவிக்கும். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் இந்த அர்த்தமே ஒரு ஶ்லோகத்தால் விளக்கப்படுகின்றது.

"इयाज सोऽपि सुबहून्यज्ञान् ज्ञानव्यपाश्रयः ।
ब्रह्मविद्यामधिष्ठाय तर्तुं मृत्युमविद्यया ॥"

ज्ञानव्यपाश्रय :—ஜ்ஞாநத்தை அவலம்பித்தவரான [அதாவது —ஶாஸ்த்ர ஶ்ரவணத்தால் ஏற்படும் ப்ரம்ஹ ஜ்ஞாநத்தை உடையவரான], सोऽपि - அவரும் [அந்த ஜநகரும்,] ब्रह्मविद्याम् - உபாஸந ரூபமான வித்யையை, अधिष्ठाय - [உத்தேஶ்யமாக] அடைந்து [அதாவது— அதைப் பலமாகக் கைப்பற்றி], मृत्युम् - [பக்தியை உத்பத்தி அடையவொட்டாமல் தடுக்கும் புண்யபாப ரூபங்களான ப்ராசீந கர்மங்களை], अविद्यया - [வித்யைக்கு அங்கமாகிற] கர்மாநுஷ்டாநத்தால், तर्तुम् - கடப்பதற்கு, सुबहून् - அநேகங்களான, यज्ञान् - யாகங்களை, इयाज - செய்தார். ஜநகமஹாராஜன் சிறந்த ப்ரஹ்மஜ்ஞான முள்ளவர். அப்படி ஜ்ஞாநவானாக இருக்கையிலும் அவர் கர்மங்களை விடாமல் செய்தார். ஏனென்றால், 'அப்படிப்பட்ட கர்மாநுஷ்டாநத்தால் மாத்ரம் உபாய விரோதிகளான ப்ராசீந கர்மங்கள் நாஶமடைந்து, ரஜஸ்தமஸ்வஸுக்கள் தலைசாயும்; அப்பொழுதுதான் பக்தி நிஷ்பந்நமாகும்' என்பதை ஜகத்திற்குத் தெரிவிப்பதற்காகவன்றோ? ஜ்ஞாநமிருக்கையிலும் அவர் கர்மாநுஷ்டாநமின்றிக்கே உபாஸநத்தில் ப்ரவர்த்தியாமல் கர்மத்தைச் செய்தே அவர் அதில் ப்ரவர்த்தித்தா ரென்றால், உபாஸநத்திற்குக் கர்மயோகம் அங்கமென்று ஏற்படுகின்றதன்றோ? இந்த விஷ்ணுபுராண ஶ்லோகம் இந்த ஶ்ருதிக்கு உபப்ருஹ்மணம் என்பதற்கு, "अविद्यया, मृत्युं, तीर्त्वा" இத்யாதியான பதப்ரயோகங்களே ப்ரத்யபிஜ்ஞாபகங்கள்.

---

12. ஒன்பதாவது பத்தாவது பதினொராவது மந்த்ரங்களில் வித்யை அவித்யை இவைகளைப்பற்றி விசாரம் செய்யப்பட்டது.

அவித்யை (அதாவது - கர்மம்) அங்கமாகவும் வித்யை (அதாவது - உபாஸநம்) அங்கியாகவும் இருப்பதால், ஒன்றைவிட்டு மற்றொன்று மாத்ரம் மோக்ஷத்திற்குப் பர்யாப்தமாக மாட்டாது என்று அறிந்தோம். அது போலவே நிஷித்தகர்ம நிவ்ருத்தியும் உபாஸநத்திற்கு அங்கமாக நிற்கின்றதாகையால், இந்த அங்காங்கிகளுள்ளும் ஒன்றை விட்டு மற்றொன்று மாத்ரம் மோக்ஷத்திற்கு அபர்யாப்தமே. இந்த விஷயம் பன்னிரண்டு முதல் பதினாலாவது பர்யந்தங்களான மந்த்ரங்களால் விவரிக்கப் படுகின்றது. 'அவித்யை' என்பது கர்மாநுஷ்டாநத்தைக் குறிப்பதுபோல, இவ்விடத்தில் 'அஸம்பூதி' என்பது நிஷித்த கர்ம நிவ்ருத்தியைக் குறிக்கின்றது. இந்த மூன்று மந்த்ரங்களும் முன் மூன்று மந்த்ரங்களின் சாயையை அநுஸரித்தே இருக்கின்றன வென்பதும் கவனிக்கத் தக்கது. முதல் மந்த்ரத்தால் இந்த அங்காங்கிகளுள் ஒன்றொன்றை மாத்ரம் அநுஷ்டிப்பவர்களை நிந்தித்து, இரண்டாவதால் அப்படி ஒன்றொன்று மாத்ரம் மோக்ஷ ஸாதநமாகாவிட்டால் எது மோக்ஷ ஸாதநமாகும் என்பதை ஸாமாந்யமாகச் சொல்லி, மூன்றாவதால் அப்படி ஸாமாந்யமாகக் குறிக்கப்பட்டதை வ்யக்தமாக விவரிக்கின்றது.

[ப-ரை] **ये** - எவர்கள், **असंभूतिम्** - [ஹிம்ஸை திருட்டு இவை முதலிய யோக விருத்தங்களான] நிஷித்த கர்மங்களின் நிவ்ருத்தியை மாத்ரம், **उपासते** - அநுஷ்டிக்கிறார்களோ, **ते अन्धन्तमः प्रविशन्ति** - அவர்கள் காடாந்தகாரமாகிற அஜ்ஞாநத்தை அடைகிறார்கள். **ये संभूत्याम् उ रताः** - எவர்கள் [நிஷித்தங்களிலிருந்து நிவ்ருத்தியை அடையாமல்] உபாஸநத்தை மாத்ரம் அநுஷ்டிப்பதில் ஆஸக்தி உள்ளவர்களாக இருக்கிறார்களோ, **ते ततो भूय इव तमः प्रविशन्ति** - அவர்கள் அதைக் காட்டிலும் அதிகமாக இருண்டிருக்கும் அஜ்ஞாநத்தை அடைகிறார்கள்.

இவ்விடத்தில் '**संभूतिः**' - என்னும் ஶப்தத்தின் அர்த்தம் விசாரிக்கப்படவேண்டும். "**एतमितः प्रेत्य अभिसंभवितास्मि**" [இந்தத் தேஹம் போனபிறகு அவனை அடையப் போகிறேன்] என்றும், **ब्रह्मलोकमभिसंभवानि**" [நான் ப்ரஹ்மமாகிற லோகத்தை அடைவேன்] என்றும் ப்ரஹ்ம ப்ராப்தியாகிற அநுபூதியை 'ஸம்பூதி' என்று உபநிஷத்துக்கள் பேசுகின்றன. இவ்விடத்தில் அந்த ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாகிற ஸமாதி ரூபமான அநுபவமே 'ஸம்பூதி' என்னும் ஶப்தத்தால் சொல்லப்படுகின்றது. ஆகையால், 'அஸம்பூதி' என்னும் ஶப்தம் ஸமாதி ரூபமான ஸம்பூதியைக் காட்டிலும் வேறுபட்டதான நிஷித்த கர்மங்களிலிருந்து நிவ்ருத்தியைச் சொல்லுகின்றது. கீழில் 'அவித்யை' என்பதற்கு எப்படி அர்த்தம் செய்தோமோ, அப்படியே இங்கும். மேல் பதினாலாவது மந்த்ரத்தில் '**संभूतिं च विनाशं च**' என்னுமிடத்தில் 'விநாஶ' என்னும் ஶப்தத்தால் 'அஸம்பூதி' அநுவதிக்கப்படுவதையும் கவனித்தல் வேண்டும்.

अन्यदेवाहुस्संभवादन्यदाहुरसंभवात् ।
इति शुश्रुम धीराणां ये नस्तद् विचचक्षिरे ॥ १३ ॥
संभूतिश्च विनाशश्च यस्तद्वेदोभयं सह ।
विनाशेन मृत्युं तीर्त्वा संभूत्याऽमृतमश्नुते ॥ १४ ॥

---

13. அப்படியானால் எது மோக்ஷ ஸாதநமாகும் என்பது ஸாமாந்யமாகச் சொல்லப்படுகின்றது.

[ப - ரை] **संभवात्**-ஸம்பூதியைக் காட்டிலும், **अन्यदेव**-வேறுபட்டதாயிருப்பதையே, [**मोक्षसाधनम्**-மோக்ஷத்திற்கு ஸாதநமென்று], **आहुः**-[உபநிஷத்துக்கள்] சொல்லுகின்றன. **असंभवात्**-அஸம்பூதியைக் காட்டிலும், **अन्यदेव**-வேறுபட்டதா யிருப்பதையே, **आहुः**—[மோக்ஷ ஸாதநமென்று உபநிஷத்துக்கள்] சொல்லுகின்றன. **ये नस्तद् विचचक्षिरे तेषां धीराणामिति शुश्रुम**-எவர்கள் எங்களுக்கு அந்த மோக்ஷ ஸாதநத்தை விவேசித்து உபதேசித்தார்களோ அந்தப் புத்திமான்களிடமிருந்து இவ்வாறாகக் கேட்டிருக்கிறோம்.

---

14. '**अन्यत्**' என்று ஸாமாந்யமாகச் சொன்னதை விவரித்துக் கொண்டு, அங்கம் அங்கி இவை இரண்டும் அபேக்ஷிதங்கள் என்று சொல்லுகின்றது இந்த மந்த்ரம்.

[ப - ரை] '**संभूतिश्च**' [அங்கியாகிற] உபாஸநத்தையும் [அதாவது—ஸமாதியையும்], **विनाशश्च**-[அங்கமாகிற நிஷித்தங்களின்] நிவ்ருத்தியையும், **तदुभयम्**-இந்த இரண்டையும், **सह**-[அங்காங்கிரூபமாக] ஒன்றோடொன்று கூடியதாக, **वेद** - அறிகிறானோ [அறிந்து அம்மாதிரி அநுஷ்டிக்கிறானோ], [**सः**—அவன்], **विनाशेन**[நிஷித்தங்களின் நிவ்ருத்திரூபமான அங்கத்தின் அநுஷ்டாநத்தால், **मृत्युम्** - [ஸமாதிக்கு விரோதியாயிருக்கும்] புண்ய பாபரூபமான கர்மத்தை, **तीर्त्वा** - கடந்து, **संभूत्या** - [அப்படி அந்தக் கர்மங்கள் கழிந்ததால் நிஷ்பந்தமாயிருக்கும்] ஸமாதியால், **अमृतम्** - மோக்ஷத்தை, **अश्नुते** - அடைகிறான்.

பாபத்தைக் கடப்பது மோக்ஷத்தை அடைவது இவைகள் பலமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், 'ஸம்பூதி' 'விநாஶம்' இந்த ஶப்தங்களுக்குக் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அர்த்தமே உபபந்நமாகும். 'விநாஶம்' என்பதற்கு 'நாஶம்' என்பதே பொருள். ஒன்றை நாம் வர்ஜ்ஜித்தால் அது நமக்கு நஷ்டமாகிவிடுகிறபடியால், வர்ஜ்ஜநம் [அதாவது - ஒழிப்பது] என்னும் அர்த்தம் 'விநாஶ' என்னும் ஶப்தத்திற்குப் பொருந்தும். எதை வர்ஜ்ஜிப்பதென்றால், மாநம் தம்பம் ஹிம்ஸை ஸ்தேயம் இவை முதலிய யோக விரோதிகளான நிஷித்த வ்யாபாரங்களே என்று ஸுலபமாகக் கிடைக்கும்.

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥ १५ ॥

---

15. ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதநமாகிற பக்தி யோகத்தின் ஸ்வரூபமும் அதன் அங்கங்களும் கீழ் ஆறு மந்த்ரங்களால் ப்ரதி பாதிக்கப் பட்டன. இந்த மந்த்ரம் இதற்கு அடுத்துவரும மந்த்ரம் இந்த இரண்டு மந்த்ரங்களால் பக்தி யோக நிஷ்டனால் செய்யப்படவேண்டிய அநுஸந்தாந ப்ரகாரம் உபதேசிக்கப்படுகின்றது. இவைகளுள் முதல் மந்த்ரத்தால், ஸமாதியை நிஷ்பங்கமாகவொட்டாமல் தடுக்கும் இடையூறுகளின் நிவ்ருத்தி ப்ரார்த்திக்கப்படுகின்றது. 'ஜீவனுடைய மநஸ்ஸானது போக்ய வஸ்துக்களால் இழுக்கப்பட்டு பரமாத்மாவினிடம் செல்லாமல் தடுக்கப்படுகின்றது: அந்த மநஸ்ஸை இந்த்ரியங்களுக்கெல்லாம் ஈஶனாக இருக்கும் நீ, ஹே பகவந்! சரியான மார்க்கத்தில் செலுத்தவேண்டும்' என்பது இந்த மந்த்ரத்தின் திரண்ட பொருள். ஜீவனை ஸத்யனென்றும், மநஸ்ஸை அதன் முகமென்றும், போக்ய வஸ்துக்களை ஸ்வர்ணமயமான பாத்ரமென்றும் பேசி, 'அந்தப் பாத்ரத்தால் மூடப்பட்டுள்ள மநஸ்ஸைத் திறந்துவிடு' என்று பகவான் ப்ரார்த்திக்கப்படுகிறான். இம்மாதிரிப் பேசுவது ஒரு சமத்காரமே.

[ப - ரை] **पूषन्** - ஹே பகவானே, **सत्यस्य** - ஜீவனுடைய, **मुखम्** - மநஸ்ஸானது, - **हिरणमयेन** - பொன்னாற் செய்யப்பட்டிருக்கும் பொருள் போல ஆகர்ஷகமாயிருக்கும் போக்ய வஸ்துக்களாகிற, **पात्रेण** - பாத்ரத்தால் [அதாவது-மூடியால்], **अपिहितम्** - மூடப்பட்டிருக்கின்றது. **तत्** - அதை [அந்த மநஸ்ஸை], **त्वम्** - நீ, **अपावृणु** - திறந்துவிடு. எதற்காகவென்றால், **सत्यधर्माय** - ஜீவனுக்கு இயற்கையான தர்மமாயுள்ள, **दृष्टये** - [உன்னுடைய] தர்ஶநத்தின் பொருட்டு.

ஜந்மாந்தர கர்மத்திற்கு அதீநமாயுள்ள போக்ய வர்க்கமானது ஜீவனுடைய மநஸ்ஸைப் பரமாத்மாவைப் பார்க்க வொட்டாமல் மூடிக்கொண்டிருக்கின்றது. பகவத் தர்ஶநமும் அவனுடைய அநுபவமும் ஜீவனுக்கு ஸ்வதஸ் ஸித்தமான தர்மம். போக்ய வர்க்கமாகிற மூட்டத்தை எடுத்து விட்டால், பகவத் தர்ஶநம் தன்னால் ஏற்பட்டுவிடும் என்பது கருத்து.

पूषन् என்பது ஸூர்யனைக் குறிக்கும். இவ்விடத்தில் ஸூர்யனுக்கு அந்தராத்மாவாக இருக்கும் பரமாத்மாவைக் குறிக்கின்றது. ஆஶ்ரிதர்களைப்போஷிக்கும் ஸ்வபாவத்தை உடையவனானதால் பகவான் 'பூஷந்' என்று அழைக்கப் படுகிறான் என்றும் வ்யுத்பத்தி செய்யலாம்.

'**सत्य**' என்னும் ஶப்தம் விகாரமற்று ஏகரூபமாக இருக்கும் பொருளைக் குறிக்கும். ஜீவனுடைய ஸ்வரூபம் அப்படிப் பட்டதாத

पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य
व्यूह रश्मीन् समूह तेजः ।
यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि
योऽसावसौ पुरुषस्सोहमस्मि ॥ १६ ॥

லால், ஜீவன் 'ஸத்யன்' என்று வ்யவஹரிக்கப் படுகிறுன். "**सत्यञ्चानृतञ्च सत्यमभवत्** - என்பது முதலான இடங்களில் 'ஸத்ய' ஶப்தம் ஜீவனிடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜீவனுடைய மநஸ்ஸை முகமாகப் பேசுவதும் போக்ய வஸ்துக்களை பொன்மயமான வஸ்துவாகப் பேசுவதும் மிகவும் உபபந்நம் என்பதை ஸாதாரணமாக அறிந்து கொள்ளலாம்.

---

16. மறுபடியும், கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்ட பகவத் தர்ஶநமும், அந்தத் தர்ஶநத்திற்கு எது ஸாதநமோ அந்த ஸாதநமும் ப்ரார்த்திக்கப்படுகின்றன.

[ப - ரை] **पूषन्** - [ஆஶ்ரிதர்களைப்] போஷிக்கிறவனே [அல்லது - ஸூர்யனுக்கு அந்தர்யாமியாயிருக்கும் பகவானே], **एकर्षे** - நிகரற்ற ருஷியே, **यम** - [எல்லாரையும்] நியமித்துக் கொண்டிருப்பவனே, **सूर्य** - [ஆஶ்ரிதர்களுடைய புத்தியைச்] சரியான வழியில் ப்ரேரிக்கிறவனே, **प्राजापत्य** - ப்ரஜைகளுக்கெல்லாம் பதியாக இருக்கும் விஷ்ணுவே, **रश्मीन्** - [உக்ரமான] கிரணங்களை [அதாவது, உன்னுடைய திவ்ய தர்ஶநத்திற்கு ப்ரதிபந்தகமாயிருக்கும் கிரணங்களை], **व्यूह** - விலக்கு. **तेजः** - [உன்னுடைய தர்ஶநத்திற்கு அநுகூலமாயும் ஸௌம்யமாயுமிருக்கும்] தேஜஸ்ஸை, **समूह** - சேர்த்துக்கொடு. **ते** - உன்னுடைய, **यत् कल्याणतमं रूपम्** - யாதொரு நிரதிஶய போக்யமான ரூபமுண்டோ, **तत् ते [रूपम्]** உன்னுடைய அந்த ரூபத்தை, **पश्यामि** - பார்க்க விரும்புகிறேன். **योऽसावसौ पुरुषः** - யாதொரு இந்தப் புருஷனுண்டோ, **अहं सोऽस्मि** - நான் அவனுகவே இருக்கிறேன் [அதாவது, நான் அவனையே அந்தர்யாமியாக உடைத்தாயிருக்கிறேன். அவன் எனக்கு ஆத்மாவாகவும் நான் அவனுக்கு ஶரீரமாகவும் இருக்கிறேன்.]

पूषन् - இதன் அர்த்தம் கீழ் மந்த்ரத்தின் உரையில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

यम-यमयतीति यमः - எவன் நியமிக்கிருனே அவனை 'யம'னென்று சொல்லக்கூடும். 'எல்லாருக்கும் அந்தர்யாமியாக இருக்குமவனே' என்பது பொருள். '**अन्तः प्रविष्टश्शास्ता जनानां सर्वात्मा**', "**यः पृथिवीमन्तरो यमयति**" இத்யாதியான அந்தர்யாமி ஶ்ருதிகள் ப்ரமாணம்,

2/10/06

Anobila Mutt, Karyam, Perugavazuthan Village, *via* Muthupettai ... 3
9. ,, V. R. Veeraraghava Iyengar, 2/84 Kaveri lane, Bhavani, *via* Erode ... 3
10. ,, K. Ramanujachariar, Kavanur, Anatur Post, Panrutti ... 3
11. ,, V. Krishnamachari, 38 South Gopalasmudram, Mannargudi. 3

... Iyengar, Advocate, Mylapore ... 3
21. ,, D. Vedantacharya, 18 Beperpaul Road, P. O. Kalighat, Calcutta. 3
22. ,, K R Ramanujam District Engineer, M. & S M. Ry. Hubli... 3
23. ,, R. Veeraraswami Iyengar, Thillaisthanam P. O. *via* Tirvadi, (Tanjore Dt.) ... 3
24. ,, P. K. Srinivasaraghavachariar, Pleader Tindivanam ... 3

[இந்த ஸஞ்சிகையுடன் ஒன்பது ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இதுவரையில் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்படவில்லை.]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்திரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் [...]ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினால், அந்த மா[று]தலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.

பற்றி தத்வ ...

வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதுக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம்:— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள வீதம் சார்ஜு வஸூலில் செய்யப்படும்.

(1)	முழுப்பக்கம் ஒருதடவைக்கு		ரூ.	4—0—0
(2)	ஷை	3 மாஸங்களுக்கு	,,	10—0—0
(3)	ஷை	6 ,,	,,	18—0—0
(4)	ஷை	12 ,,	,,	34—0—0

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

:ஆபீஸ் விலாஸம்:

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.